


34ஆவது ஆண்டில்
Tel: 416-282-8059
# விளம்பரம்
கனடாவின் மூத்த தமிழ் இதழ்
email: vlambaram@sympatico.ca www.vlambaram.com




நிதி: 34 பாலம்: 24 சமூக முன்னேற்றப்பத்திரிகை மாதமிருமுறை இலவசம் DECEMBER 15, 2024

# மத்திய அரசின் செலவுகளுக்கு மேலதிக நிதி

கனடிய நாடாளுமன்றம் மத்திய அரசின் மேலதிக அரசாங்க செலவினங்களுக்காக $21.6 பில்லியனை வழங்க டிசெம்பர் 10, 2024ஆம் திகதி ஒப்புதல் அளித்துள்ளது. அரசாங்க செலவினங்களுக்கு மேலதிகமாக பணம் தேவை என திறைசேரி சபைத் தலைவர் (Treasury Board) அனிதா ஆனந்த் நாடாளுமன்றத்தில் இந்தப் பிரேரணையை முதலில் தாக்கல் செய்த போது அவர் இந்தச் செலவீனம் நாடாளுமன்றத்தால் அங்கீகரிக்கப்படாவிட்டால் மத்திய அரசின் சில துறைகள் நிதிச் சிக்கலில் தள்ளப்படும் என எச்சரித்திருந்தார். இவ்வாறு அரசின் சில துறைகள் நிதிச் சிக்கலுக்குள்ளாக்கப்படாமலிருக்க இந்த மேலதிக செலவினம் நாடாளுமன்றத்தில் டிசெம்பர் 10, 2024ஆம் திகதிக்கு முன்னர் அங்கீகரிக்கப்பட வேண்டும் என்றும் அவர் தெரிவித்திருந்தார்.

இந்த $21.6 பில்லியன் அரசாங்க செலவினத்தில் கனடிய முதற்குடியினரின் குழந்தை நலசேவைகள், மத்திய அரசின் பல் பராமரிப்பு சேவைகள், குவிபெக் மாகாணம் அங்கு புகலிடம் கோரியவர்களைப் பராமரித்த செலவுகளுக்கான கொடுப்பனவு போன்ற பல்வேறு திட்டங்களுக்கான நிதி ஒதுக்கீடு அடங்கி இருந்தன.

நாடாளுமன்றத்தின் இலையுதிர் கால அமர்வு ஆரம்பித்ததில் இருந்தே கடந்த இரண்டு மாதங்களுக்கு மேலாக பசுமை-தொழில்நுட்ப நிதியில் நூற்றுக்கணக்கான மில்லியன் டொலர் தவறாகச் செலவழிக்கப்பட்டது என கனடாவின் கணக்காளர் நாயகத்தின் அறிக்கையை மேற்கோள் காட்டி அந்த ஆவணங்களை நாடாளுமன்றத்தில் ஒப்படைக்குமாறு பழமைவாதக் கட்சி நாடாளுமன்ற வழமையான அலுவல்களுக்கு முட்டுக்கட்டை போட்டு வந்தது.

பழமைவாதக்கட்சி மத்திய அரசு இந்த ஆவணங்களைச் சமர்ப்பிக்க வேண்டும் என்ற கோரிக்கையை நாடாளுமன்றத்தில் சிறப்புரிமை விவாதமாக்கி (Privilege debate) தாங்கள் இந்த ஆவணங்களை லிபரல்கட்சி அரசு வெளியிடும்வரை தொடர்ந்து நடத்திக் கொண்டிருப்போம் என்று கூறி நாடாளுமன்றத்தில் வேறு ஓர் அலுவல்களையும் நடைபெறவிடாமல் தொடர்ந்து விவாதித்துக் கொண்டிருந்தது. நாடாளுமன்றத்தில் மற்றைய அனைத்து விவகாரங்களிலும் பார்க்க சிறப்புரிமை விடயங்கள் முன்னுரிமை பெறும். இதனால் நாடாளுமன்றத்தில் கடந்த இரண்டு மாதங்களுக்கு மேலாக எந்த ஓர் அரசாங்க அலுவல்களும் நடைபெறவில்லை.


Anita Anand
Thanks: LinkedIn

லிபரல்கட்சியின் அவைத்தலைவர் கரினா கோல்ட் (Karina Gould) முன்னர் ஊடகவியலாளர்களுக்குத் தெரிவிக்கும்போது, “பழமைவாதக்கட்சி அரசாங்கத்தை பயணக் கைதிகளாக வைத்துள்ளனர்” என்று தெரிவித்திருந்தார். அப்போது அவர் அரசாங்கம் ஏற்கனவே பசுமை-தொழில்நுட்ப நிதி தொடர்பான 29,000 பக்க ஆவணங்களை வெளியிட்டுள்ளது என்றும் தெரிவித்திருந்தார்.

இதைத் தொடர்ந்து பழமைவாதக்கட்சியின் அவைத்தலைவர் அன்ரூ சியர் (Andrew Scheer) அரசு ஆவணங்களை வெளியிடும்போது நாடாளுமன்ற ஆலோசகரான மைக்கல் பெடாரட் (Michel Bedard) நாடாளுமன்ற சபாநாயகர் கிரெக் பெர்கஸ் (Greg Fergus)இற்கு எழுதிய கடிதத்தை ஊடகவியலாளர்களுக்குக் காட்டி அதில் தகவல் அணுகல் சட்டவிதிகளின்படி சில பக்கங்களை அரசு வெளியிடவில்லை என்பதைச் சுட்டிக் காட்டினார். அவர் அப்போது ஊடகவியலாளர்களுக்கு “லிபரல் அரசாங்கம் எந்த ஆவணங்களை ஒப்படைக்க வேண்டும் எனத் தெளிவாக தேர்வு செய்தே வெளியிட்டுள்ளது. எல்லாவற்றையும் வெளியிடவில்லை” என்று கூறினார். அவர் மேலும் கூறுகையில், “ரூடோவின் லிபரல் அரசாங்கம் இந்த ஊழல் தொடர்பான ஆவணங்களை RCMP ஒப்படைப்பதைவிட நாடாளுமன்றத்தை முடக்கி வைப்பதையே விரும்புகின்றனர்” என்றார்.

அரசாங்கத்திற்கு நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை வாக்குகள் இருந்தால் இச்சிறப்புரிமை விவாதத்தை முடிவுக்குக் கொண்டு வரலாம். லிபரல் அரசுக்கு பெரும்பான்மை வாக்குகள் நாடாளுமன்றத்தில் இல்லை. இதனால் லிபரல் அரசிற்கு புதிய ஜனநாயகக் கட்சியினதோ அல்லது புளக் குவிபெக்குவா கட்சியினதோ ஆதரவு தேவை. ஆனால், இந்த இரண்டு எதிர்க்கட்சிகளுமே லிபரல் கட்சியை பசுமை-தொழில்நுட்ப நிதி தொடர்பான எல்லா ஆவணங்களையும் வெளியிட வேண்டுமென வலியுறுத்துகின்றன.

பழமைவாதக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரான அலெக்ஸாண்டர் பவுலரிஸ் (Alexander Boulerice) ஊடகவியலாளர்களுக்குத் தெரிவிக்கையில், “இப்போது நாங்கள் நாடாளுமன்றத்தில் பார்ப்பது வருந்தத்தக்க விடயம். லிபரல் அரசு வெளிப்படையாகச் செயல்படவில்லை. அரசு முழுமையான சில பக்கங்களை வெளியிடாமல் தவிர்ப்பது சரியல்ல. அவர்கள் ஆவணங்களை முழுமையாக வெளியிட வேண்டும்” என்றார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், “அதே சமயம் பழமைவாதக்கட்சியினரோ திட்டமிட்டு நாடாளுமன்றத்தை நடைபெறவிடாமல் முடக்குகின்றனர். தமது சொந்தப் பிரேரணையை வாக்கெடுப்புக்கு விடாமல் மீண்டும், மீண்டும் துணைத் திருத்தங்கள் (Sub - Amendments) பிரேரித்து தாமதப் படுத்துகின்றனர்” என்றார்.

புளக் குவிபெக்குவா அவைத்தலைவர் அலைன் தெறியன் (Alain Therrien) ஊடகவியலாளர்களுக்குத் தெரிவிக்கையில், “நாடாளுமன்றத்தை வழமையான நிலைக்குத் திரும்பவைக்க லிபரல் அரசு ஆவணங்களை முழுமையாக வெளியிட வேண்டும்” என்றார்.

தொடர்ச்சி 05ஆம் பக்கம்















RENT | BUY | SELL | INVEST | LEASE

*In CANADA from anywhere in the world*

- Respectable Real Estate Brokerage based in Toronto
- Over 20 Years in the business
- Over 150 Sales Representatives.
- Brokers combined experience over 50 Years
- Well connected with Builders, Developers, Mortgage Brokers, Home Inspectors, Insurers ....






For
more information
Feel Free
to call or
visit to
www.hlgtarealty.com



HOMELIFE HIGHER STANDARDS

**HomeLife/GTA Realty Inc. Brokerage***

5215 Finch Ave. E. Suite 203, Toronto, ON. M1S OC2

**Tel: 416-321-6969** * Independently owned and operated.


Available Till Midnight
Including Weekends & Holidays
ANTON
DHARMASEELAN
MORTGAE AGENT
#1 Mortgage Agent in GTA
#2 in Canada
CALL ME FIRST
FOR ALL YOUR MORTGAGE NEEDS
PURCHASE
REFINANCE
SELF EMPLOYED
BAD CREDIT
INVESTMENT PROPERTY
RENEWAL
MAJOR BANKS
ALTERNATIVE LENDERS
B LENDERS
CREDIT UNIONS
TRUST COMPANIES
PRIVATE LENDERS
416 704 1200
anton@myhomemls.ca
MORTGAGE ALLIANCE
Broker # 10530
#200, 2005 Sheppard Ave. E.
Toronto, ON M2J 5B4
FAX: 1 866 566 3068

# புதிய அரசும் மக்களின் எதிர்பார்ப்பும்

– அரவின் –

இலங்கையில் ஆட்சிக்கு வந்திருக்கும் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம், ஒரு மாதத்தையே நிறைவு செய்திருக்கின்ற போதும் இன்னமும் முக்கியமான சவால்களை எதிர்கொள்வதற்கான நகர்வுகளில் இறங்கவில்லை.

மிகப்பெரிய வாக்குறுதிகளுடன் இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்தது. கிட்டத் தட்ட 240 பக்கங்களில் அதன் தேர்தல் அறிக்கை வெளியிடப்பட்டது.

நாட்டை முழுமையாக மாற்றி அமைப்பது, நாட்டின் ஆட்சி முறைகளை அடியோடு மாற்றுவது, ஊழல் இல்லாத, மோசடி இல்லாத நிர்வாகத்தை உருவாக்குவது, அப்பழுக்கற்ற அரசியலை அறிமுகம் செய்வது என்று வரிசையான வாக்குறுதிகள் கொடுக்கப்பட்டிருந்தன.

அதேபோல, அரசியலமைப்பு மாற்றம், நிறைவேற்று அதிகார ஒழிப்பு போன்ற அரசியல் ரீதியான வாக்குறுதிகளும், மக்களின் அன்றாட வாழ்வாதாரத்திற்குத் தேவையான சூழலை ஏற்படுத்துவதாகக் கொடுக்கப்பட்ட வாக்குறுதிகளும் அதில் இருந்தன.

எந்தப் பக்கம் திரும்பினாலும், வாக்குறுதிகளை அரசாங்கம் நிறைவேற்ற வேண்டும் என்ற எதிர்பார்ப்புடன் காத்திருக்கும் மக்களை, திருப்திப்படுத்த வேண்டிய நிலையில், அனுர குமார திசாநாயக்கவின் அரசாங்கம் இருக்கிறது.

இது ஒரு சாதாரண காரியம் இல்லை. ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெறுவதற்கு முன்னர், தன்னை ஒரு மாயாஜாலக்காரர் என எண்ணிவிட வேண்டாம் என்று அவர் கூறியிருந்தார்.

விளம்பரம்
VLAMBARAM™
34ஆவது ஆண்டில்
பதிப்பாளர்: ராஜா மகேந்திரன்
ஆசிரியர்: சத்தியா மகேந்திரன்
முகாமையாளர்: கமல் செல்லையா
ஊடகப் பொறுப்பாளர்: விஜய் செல்லையா
அலுவலகப் பொறுப்பாளர்: சுதர்சினி D.

'விளம்பரம் பப்ளிகேஷன்ஸ் இங்' நிறுவனத்தால் வெளியிடப்படும் 'விளம்பரம்' பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களும், விளம்பரங்களுக்கு விளம்பரதாரர்களுமே பொறுப்பாளர்கள். விளம்பரம் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் ஆக்கங்களை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ ஆசிரியரின் அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.

Vlambaram Publications Inc.
GTA Square, 5215 Finch Ave.E.,
#201, Toronto, ON M1S 0C2, Canada
TEL- 416-282-8059
email:vlambaram@sympatico.ca
web: www.vlambaram.com
Vlambaram Publications Inc. 2020 All Rights Reserved

ஆனால், தேசிய மக்கள் சக்தியை நம்பி வாக்களித்த மக்கள் அப்படிக் கருதவில்லை.

அவர்கள் நாட்டின் அரசியல் முறைமை மாற்றத்தை எதிர்பார்க்கின்றனர். பொருளாதாரரீதியான மாற்றத்தை எதிர்பார்க்கின்றனர்.

எல்லாவிதமான மாற்றங்களும் குறுகிய காலத்துக்குள் நிகழ வேண்டும் என்று எதிர்பார்க்கின்றனர். ஆனால், அந்த வேகத்தில், மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றக்கூடிய சூழலில் அரசாங்கம் இல்லை.



இம்மாற்றங்களை உடனடியாக நிகழ்த்துவதற்கு சாத்தியமும் இல்லை, அதற்கான சூழலும் இல்லை. ஏனென்றால், இந்த அரசாங்கம் பொருளாதாரச் செழிப்புமிக்க ஒரு நாட்டைப் பொறுப்பேற்கவில்லை.

பொருளாதார நெருக்கடியிலிருந்து மீண்டு வருகின்ற ஒரு நாட்டைத்தான் தேசிய மக்கள் சக்தி பொறுப்பெடுத்தது.

பொருளாதார நெருக்கடியின் பாதிப்புகளை சரி செய்வது என்பது குறுகியகால நோக்கில் சாத்தியப்படாது. ஆனால், தாங்கள் எதிர்பார்த்த பொருளாதார நிவாரணங்கள் மற்றும் மாற்றங்கள் என்பன விரைவாக நடக்க வேண்டும் என மக்கள் எதிர்பார்க்கின்றனர். அவர்கள் அதிகம் நொந்து போய் விட்டனர். அதிலிருந்து மீள வழிபார்க்கின்றனர்.

அவர்களுக்கு அப்படியான எண்ணத்தை ஏற்படுத்தியது தேசிய மக்கள் சக்திதான். நாங்கள் ஆட்சிக்கு வந்தால் மின்சாரக் கட்டணத்தைக் குறைப்போம் என்றனர். எரிபொருள் மற்றும் எரிவாயு விலைகளைக் குறைப்போம் என்றனர்.

குறைந்த விலைக்குப் பொருட்களைக் கிடைக்கச் செய்வோம், பணவீக்கத்தைக் கட்டுப்படுத்துவோம் என்று கூறினர்.

இறக்குமதியைக் குறைத்து, ஏற்றுமதியைப் பெருக்கி வருமானத்தைப் பெறுவோம் என்றனர்.

அரசாங்கச் செலவினங்களைக் கட்டுப் படுத்தி, உற்பத்தியையும் வருமானத்தையும் அதிகரித்து, பொருளாதாரச் செழிப்பை ஏற்படுத்துவோம் என்றனர். இப்படி இவற்றையெல்லாம் வரிசையாக அடுக்கிக் கொண்டிருந்தபோது, மக்களுக்கு மாற்றம் அவசியமாகப்பட்டது.

முன்னைய அரசியல்வாதிகளிடம் நம்பி நம்பி ஏமாந்து போனதன் விளைவாக, புதிதாக ஒருவரிடம் ஆட்சியைக் கொடுத்துப் பார்த்தால் என்ன என்ற எண்ணம் வந்தது. அப்படித்தான் இந்த ஆட்சி மாற்றம் நிகழ்ந்தது.

ஆனால், இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்தபிறகு, குறிப்பிடத்தக்க நிவாரணங்கள் எதையும் மக்களால் அடைய முடியவில்லை. மின்சாரக் கட்டணம், எரிபொருள் விலை குறைப்பு போன்றவை இடம்பெறவில்லை. பொருட்களின் விலைகளும் உயரத் தொடங்கி விட்டன.

பொருளாதார நெருக்கடி காலகட்டத்தில் கூட, ஒரு கிலோ அரிசியின் விலை 150 ரூபாவாகத்தான் இருந்தது. ஆனால் இப்போது அது 300 ரூபாய்க்கும் அதிகமாகி விட்டது. தேங்காயின் விலை 200 ரூபாவைத் தாண்டி சென்று விட்டது.

எல்லாவற்றுக்கும் முன்னைய அரசாங்கங் களின்மீது பழி போடுவது என்பது ஆட்சிக்குவரும் ஒவ்வொரு அரசாங்கத் தின் வழக்கமாகி விட்டது.

ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியைப் பிடிக்கும் போது, சிறிலங்கா சுதந்திர கட்சியைக் குற்றம்சாட்டும். சிறிலங்கா சுதந்திரக் கட்சி ஆட்சிக்கு வரும்போது ஐக்கிய தேசியக் கட்சியைக் குற்றம்சாட்டும். இப்பாரம்பரியம் கடந்த முக்கால் நூற்றாண்டாக இருந்து வந்தது.

மாறி மாறி ஆட்சிக்கு வந்த கட்சிகள், ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் நெருக்கடி களுக்கான தீர்வுகளைத் தேடுவதற்குப் பதிலாக, முந்தைய அரசாங்கங்களின் மீது இலகுவாகப் பழியைப் போட்டுவிட்டு தப்பிக் கொள்வதற்கே முற்படும்.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம்கூட அதற்கு விதிவிலக்கானது அல்ல என்று நிரூபித்திருக்கிறது.

தேங்காய் விலை ஏற்றத்திற்கும் முன்னைய அரசாங்கம்தான் காரணம் என்று அமைச்சர்கள் குற்றம்சாட்டுகின்றனர்.

தேங்காய், அரிசி போன்ற அத்தியாவசியப் பொருட்களுக்கு இன்று தட்டுப்பாடு ஏற்பட்டிருப்பதற்கு மனிதக் காரணிகளை மாத்திரமன்றி, இயற்கைக் காரணிகளுக்கும் பொறுப்பு இருக்கிறது. அதன் காரணமாக உற்பத்தி குறைந்திருக்கிறது.

அதேவேளை, உள்நாட்டு உற்பத்தியான அரிசி தனியே மனித உணவுத் தேவைக் காக மாத்திரம் பயன்படுத்தப்படுவதில்லை.

பொருளாதார நெருக்கடிக் காலகட்டத்தில், விலங்கு உணவுக்குத் தேவையான சோளத்தை இறக்குமதி செய்வதற்கு அரசாங்கம் கட்டுப்பாடு விதித்தது.

அதனால், உள்நாட்டு விலங்குப் பண்ணை யாளர்கள் தமது விலங்கு வளர்ப்புக்கு அரிசியைப் பயன்படுத்தும் நிர்ப்பந்தத்திற்கு உள்ளாகினர். இதனால், அரிசி உற்பத்தி அதிகரித்தபோதும் தேவை அதிகரித்தது.

அடுத்த கட்டமாக, பியர் உற்பத்திக்கும் அரிசி பயன்படுத்தப்படுகிறது.

ரணில் விக்கிரமசிங்க அரசாங்கத்தினால், இவ்வாண்டு ஜனவரி தொடக்கம், ஒக்ரோபர் 6ஆம் திகதிவரை, 361 புதிய மதுபான சாலைகளைத் திறப்பதற்கான அனுமதிப் பத்திரங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

மதுபான விற்பனையை அதிகரிப்பதற்கான வழிகள் திறக்கப்பட்டிருக்கின்ற சூழலில், அதன் உற்பத்தி அதிகரிக்கப்படுவது தவிர்க்க முடியாது.

அதற்கான மூலப் பொருளாக அரிசி பயன் படுத்தப்படுகின்றபோது, நாட்டில் அரிசித் தேவை இன்னும் அதிகரிக்கிறது. இப்படித் தான், தேங்காயின் நிலையும் உள்ளது.

மிகையான உற்பத்தி என்று ஏற்றுமதி செய்துவிட்டு, இப்பொழுது உள்நாட்டில் தட்டுப்பாடு ஏற்பட்டதும் முன்னைய அமைச்சர்கள் ஏற்றுமதி செய்து இலாபம் பார்த்தனர் என்று குற்றம்சாட்டி இருக்கின்றனர்.

முன்னைய அரசாங்கத்தின்மீது குற்றம் சாட்டுகின்ற பழக்கம் இலங்கையின் ஆட்சியாளர்கள் மத்தியில் இன்னமும் மாறவில்லை. அது மாறவும் போவதில்லை என்பதையே இப்போதைய நிலைமைகள் காட்டுகின்றன.

அதுமாத்திரமல்ல, கொடுக்கப்பட்ட வாக்குறுதிகளை உடனடியாக நிறைவேற்ற வேண்டும் என்பதில்லை என்றும் ஆட்சியாளர்கள் கருதுகின்றனர்.

வாக்குறுதி கொடுத்தது உண்மை. ஆனால் அவற்றை நிறைவேற்ற ஐந்து ஆண்டுகள் காலஅவகாசம் இருக்கின்றன என்று தட்டிக் கழிக்கின்ற போக்கு அமைச்சர்களிடம் உருவாகிவிட்டது.

பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்குவதற் கான வாக்குறுதிக்கும் அதேகதிதான் ஏற்பட்டிருக்கிறது. அச்சட்டத்தின்கீழ் இப் பொழுதும் கைதுகள் இடம்பெறுகின்றன.

இனவாதத்தைக் கட்டுப்படுத்துவதற்கு பயங்கரவாத தடைச்சட்டத்தைப் பயன் படுத்தவேண்டிய தேவை இருப்பதாக ஜனாதிபதி அனுர குமார திசாநாயக்க நியாயப்படுத்தி இருக்கிறார்.

ஆக அரசியல் ரீதியாகவும் சரி, பொருளாதார ரீதியாகவும் சரி மக்கள் சடுதியாக எதிர்பார்த்த விடயங்கள் எதையும், இந்த அரசாங்கம் உடனடியாக நிறைவேற்றக்கூடிய நிலையில் இல்லை என்பது தெளிவாகத் தெரிகிறது.

இவ் அரசாங்கம் மாற்றங்களை ஏற்படுத்தத் தயாராக இருந்தாலும், அதற்கான விருப்பத்தைக் கொண்டிருந் தாலும் அதனை உடனடியாகச் செய்வதில் சிக்கல்களை எதிர்கொள்கிறது.

தொடர்ச்சி 08ஆம் பக்கம்

# மத்திய அரசின்.....

01ஆம் பக்கத்தொடர்ச்சி

2024 மார்ச் மாதத்தில் கனடாவில் கணக்காளர் நாயகம் கரேன் ஹோகன் (Karen Hogan) சமர்ப்பித்த அறிக்கையில் கனடிய மத்திய அரசின்கீழ் இயங்கும், “நிலையான மேம்பாட்டு தொழில்நுட்பம், கனடா” (Sustainable


Auditor General of Canada Karen Hogan Thanks: CBC news

Development Technology, Canada) தனது கொள்கையை 90 தடவை மீறி உள்ளது. தகுதியற்ற 10 திட்டங்களுக்கு $59 மில்லியனை வழங்கியுள்ளது. அத்திட்டங்களின் சுற்றுச்சூழல் நன்மைகளை மிகைப்படுத்தி அடிக்கடி கூறிவந்துள்ளது. நிலையான மேம்பாட்டு தொழில்நுட்பம், கனடா (SDTC) மத்திய அரசால் 2001ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. இது பசுமை - தொழில்நுட்பத்துறையில் சிறு மற்றும் நடுத்தர வணிகங்களை ஆதரிக்கும் முகமாக உருவாக்கப்பட்டது. இந்நிறுவனம் இந்த பசுமை - தொழில்நுட்பத்துறையை ஊக்குவிக்க 2021ஆம் ஆண்டில் ஐந்தாண்டுதிட்டம் ஒன்றின் மூலம் புத்தாக்கம், அறிவியல் மற்றும் தொழில்துறை அமைச்சுடன் $1 பில்லியன் ஒப்பந்தத்தைச் செய்தது. கடந்த ஆறு ஆண்டுகளில் SDTC நிறுவனம் $836 மில்லியன் பெறுமதியான 226 செய்முறைத் திட்டங்களை நடைமுறைப்படுத்தியுள்ளது.

இத்திட்டங்களில் ஒரு சிலவற்றை ஆய்வு செய்த கணக்காளர் நாயகம் “$51 மில்லியன் மதிப்புள்ள எட்டுத்திட்டங்கள் எந்த ஒரு புதிய தொழில்நுட்பத்தின் வளர்ச்சியையும் ஆதரிக்கவில்லை. அத்திட்டங்களால் எந்த ஒரு சுற்றுச்சூழல் நன்மைகளும் ஏற்படுத்தப்படவில்லை” எனத் தெரிவித்திருந்தார். SDTC நிறுவனத்தின் தலைவரான Annette Verschuren ரொறோன்ரோவில் உள்ள எரிசக்தி சேமிப்பு நிறுவனமான NRStor Inc.


Leader of the Conservative Party Pierre Poilievre Thanks: CTV News

இனுடைய தலைமை நிர்வாக அதிகாரியாகவும் இருந்தார். அவர் 2020 மற்றும் 2021ஆம் ஆண்டுகளில் NRStor நிறுவனத்திற்கு $217,000 பெறுமதியான மானியங்களை SDTC வழங்க முடிவெடுக்கும் குழுவில் பங்கேற்றார். இது கோவிட்-19 தொற்றுநோய்ப் பரவல் காலத்தில் SDTC எடுத்த முயற்சிகளின் ஒரு பகுதியாகும். Annette Verschuren தலைவராக SDTCஇல் பணிபுரியும்போது பெறப்படும் ஊதியத்துடன் NRStor இன் தலைமை நிர்வாக அதிகாரியாக வருடாந்தம் $120,000 ஊதியமாகவும் பெறுகிறார்.

கணக்காளர் நாயகத்தின் அறிக்கையைத் தொடர்ந்து மத்திய அரசு SDTCஇற்கு வழங்கிய $1 பில்லியன் பசுமை நிதியையும் நிற்பாட்டியது. அத்துடன் புத்தாக்கம், அறிவியல் மற்றும் தொழில்துறை அமைச்சர் பிரான்சுவா-பிலிப் ஷாம்பெயின் (Frantios – Phillippe Champagne) SDTC நிறுவனத்திற்கு ஒதுக்கப்பட்ட நிதி தேசிய ஆராய்ச்சிசபை, கனடாவிற்கு (National Research Council) மாற்றப்படுவதாக அறிவித்திருந்தார். அப்போது அவர் ஊடகங்களுக்கு வெளியிட்ட அறிக்கையில், “கனடிய அரசாங்க அமைப்பான தேசிய ஆராய்ச்சி சபை, கனடா (NRC) வும் அதன் பணியாளர்களும் மத்திய அரசின் கடுமையான (Stringent) மேற்பார்வைக்கு உட்பட்டது. NRCஇன் வெளிப்படைத் தன்மை மற்றும் பொறுப்புக் கூறல் மக்களின் நம்பிக்கையை மீண்டும் கட்டியெழுப்ப உதவும்” எனத் தெரிவித்திருந்தார்.


François-Philippe Champagne

கடந்த இரண்டு மாதங்களுக்கு மேல் நாடாளுமன்றத்தில் எந்த ஓர் அரசாங்க அலுவல்களும் நடைபெறாமல் இருந்த நிலையை நிறுத்துவதற்காக கடந்தவாரம் நாடாளுமன்ற சபாநாயகர் கிரெக் பேர்கஸ் நாடாளுமன்ற மக்கள் சபையின் விதிகளை மேற்கோள்காட்டி நாடாளுமன்றத்தில் நடைபெற்றுவரும் சிறப்புரிமை விவாதத்தை இடைநிறுத்த தனது அதிகாரத்தைப் பயன்படுத்துவதாகக் கூறினார். இதைத் தொடர்ந்து மத்திய அரசின் மேலதிக அரசாங்க செலவினங்களுக்கான பிரேரணையின் வாக்கெடுப்பு தொடர்ந்தது.

பழமைவாதக்கட்சி அரசின் $21.6 பில்லியன் மேலதிக அரசாங்க செலவினங்கள் பிரேரணையை முற்றாக எதிர்த்து வாக்களித்தது. புளக் குவிபெக்குவா கட்சி இந்தப் பிரேரணையின் ஒரு பகுதியான $1.1. மில்லியன் நிதி இஸ்லாமிய மத எதிர்ப்புக்கு எதிராக நடவடிக்கைகளை எடுக்க ஒரு சிறப்புப் பிரதிநிதியை நியமிக்க ஒதுக்கப்பட்டதை மட்டுமே எதிர்த்து வாக்களித்தது.




புதிய ஜனநாயகக்கட்சி இப்பிரேரணையின் ஒரு பகுதியான $317 மில்லியன் மத்திய அரசின் புதிய பல் பராமரிப்பு சேவைகள் வழங்க ஒதுக்கப்பட்டுள்ளதைச் சுட்டிக்காட்டி மத்திய அரசின் பிரேரணையை முற்று முழுதாக ஆதரித்து வாக்களித்தது. இதனால் மத்திய அரசின் மேலதிக அரசாங்க செலவினங்களுக்காக $21.6 பில்லியன் வழங்கும் பிரேரணை நாடாளுமன்றத்தில் அங்கீகரிக்கப்பட்டது.

இந்தப் பிரேரணை நிறைவேற்ற வேண்டிய காலக்கெடுவான டிசம்பர் 10, 2024ஆம் திகதிக்கு முன்னர் வாக்கெடுப்பு நடக்குமா என்பதில் இறுதிவரைக்கும் நிச்சயமற்ற நிலையே காணப்பட்டது.


Parliament Hill in Ottawa Thanks: CTV News

வாக்களிப்பு நடைபெற்றதைத் தொடர்ந்து ஊடகவியலாளர்களுக்குப் பேட்டி அளித்த திறைசேரி சபைத்தலைவர் அனிதா ஆனந்த். “இந்த மேலதிக அரசாங்க செலவினங்களில் உள்ள திட்டங்கள் கனடிய மக்களுக்குத் தேவையான திட்டங்கள் என்பதை நாடாளுமன்றத்தில் உள்ள பெரும்பான்மை உறுப்பினர்கள் அங்கீகரித்ததில் நான் மகிழ்ச்சி அடைகிறேன்” என்றார்.

### இந்த மேலதிக அரசாங்க செலவினங்களில் உள்ளவை

மத்திய அரசின் பணியாளர்களுக்கு அவர்களது தொழிலாளர் சங்கத்துடனான உடன்படிக்கையின் விளைவாக அரசு செலுத்தவேண்டிய கட்டணம் $970.8 மில்லியன்.

முதற்குடிமக்களின் குழந்தை மற்றும் குடும்பநல சேவைத் திட்டத்திற்கு $955.2 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது. இது கனடிய மனித உரிமைகள் தீர்ப்பாயத்தின் உத்தரவைத் தொடர்ந்து எடுக்கப்பட்டது.

குவிபெக் மாகாணத்தில் புகலிடக் கோரிக்கையாளர்களைப் பராமரித்த செலவுகளுக்காக குடிவரவு, அகதிகள் மற்றும் குடியுரிமை கனடா வழங்கும் $581.3 மில்லியன்.

கனடிய தேசிய பாதுகாப்புத் துறைக்கு 16 கடல் ரோந்து பாதுகாப்பு விமானங்கள் வாங்குவதற்கு $561 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது.

உக்ரைனுக்கு வழங்க $400 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது.

கருத்துக்கணிப்புகளை நடத்தும் Leger நிறுவனம் நடத்திய கருத்துக்கணிப்பின்படி 55%இற்கும் மேற்பட்ட கனடியப் பொது மக்களுக்கு தமது நாடாளுமன்றம் 2 மாதத்திற்கு மேல் செயற்பட முடியாமல் இருந்தது என்று தெரியாது எனத் தெரிவித்துள்ளது.

# நெருங்கிவரும் தமிழ்க் கட்சிகள்

**– முகிலன் –**

நாடாளுமன்றத் தேர்தல் படிப்பினைகளுக்குப் பிறகு, தமிழ்த் தேசியக் கட்சிகள் மத்தியில், ஒரு நெகிழ்வு நிலை ஏற்படத் தொடங்கியிருக்கிறது.

கண்ணுக்கு முன்னே தேசிய மக்கள் சக்தி அதிக பலத்துடன் மிரட்டுகின்ற சூழலில், தமிழ்த் தேசியக் கட்சிகள் அரசியலில் காணாமல் போகின்ற சூழ்நிலை, உருவாகி விடுமோ என்ற பயம் பல கட்சிகளுக்கு ஏற்பட்டிருக்கிறது.

இலங்கை தமிழரசுக் கட்சி தனித்து போட்டியிட்டு 8 ஆசனங்களைக் கைப்பற்றி விட்டதாக மார்தட்டிக் கொண்டாலும் அதன் நிலைகூட, பாதுகாப்பான ஒன்று அல்ல.

தமிழ்த் தேசிய அரசியல் பரப்பில் தற்போது காணப்படுகின்ற தலைமைத்துவ வெற்றிடத்தை சரியான முறையில் நிரப்பத் தவறினால், தெற்கில் உள்ள சிங்களத் தேசிய கட்சிகள் அந்த வாய்ப்பைப் பயன்படுத்திக்கொள்ளும் ஆபத்து வேகமாகச் சூழ்ந்து கொண்டிருக்கிறது என்பது, அவர்களுக்குப் புரியத் தொடங்கியிருக்கிறது.

நீண்டகாலமாக டக்ளஸ் தேவானந்தாவின் ஈபிடிபி கொடுத்து வந்த நெருக்கடியைக் கூட, அவர்கள் பெரிதாக எடுத்துக் கொண்டதில்லை.

மகேஸ்வரன் தொடக்கம் விஜயகலா வரைக்கும் ஐக்கிய தேசியக் கட்சி யாழ்ப்பாணத்தில் காலூன்றி வளர்ந்ததைக் கூட அவர்கள் பொருட்படுத்தியதில்லை.

ஒன்றுக்கு இரண்டு தடவைகள், அங்கஜன் இராமநாதன் சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் வெற்றி பெற்றபோதும்கூட, தமிழ்த் தேசியக் கட்சிகள் அதன் ஆபத்தைப் புரிந்து கொள்ளவில்லை.

ஆனால், இந்தமுறை யாழ்ப்பாண மாவட்டத்தின் மூன்று ஆசனங்களையும், வன்னி மாவட்டத்தில் 2 ஆசனங்களையும் தேசிய மக்கள் சக்தி கைப்பற்றியிருப்பதை தமிழ்த் தேசியக் கட்சிகளால் சாதாரணமாக எடுத்துக் கொள்ளக்கூடிய நிலை இல்லை.

ஏனென்றால், பிரபல்யமான வேட்பாளர்களை வைத்தோ வாக்குகளைக் கவரக் கூடிய பிரச்சாரங்களைச் செய்தோ தேசிய மக்கள் சக்தி இந்த ஆசனங்களைப் பெறவில்லை.

அதுபோல, சாவகச்சேரி வைத்தியசாலைப் பிரச்சினையை சமூக ஊடகங்களின்மூலம் பேச முற்பட்டு, போக்கிடமின்றி அரசியலுக்குள் நுழைந்த அர்ஜுனா இராமநாதன் பெற்ற வெற்றியையும், அவர்களால் புரிந்துகொள்ள முடியவில்லை.

இது தமிழ்த் தேசியக் கட்சிகளை ஓரளவுக்கு விழிப்படையச் செய்திருக்கிறது என்பதில் சந்தேகம் இல்லை.

இலங்கை தமிழரசுக் கட்சியில் சுமந்திரன் நாடாளுமன்றத் தேர்தலில் தோல்வியடைந்திருந்தாலும், கட்சி ரீதியாக அவர் இன்னமும் பலமான நிலையில்தான் இருக்கிறார்.

சிறிதரன் அணி ஒரு பக்கமாகவும், சுமந்திரன் அணி இன்னொரு பக்கமாகவும்தான் இன்னமும் செயற்பட்டுக் கொண்டிருக்கிறது.

இப்படிப்பட்ட சூழலில் சிறிதரன் தமிழ்த் தேசியக் கட்சிகளை அரவணைப்பதன் மூலம், தமிழரசுக் கட்சியை இன்னும் பலப்படுத்தலாம் என்ற திட்டத்தில் இருக்கிறார். அவருக்குத் தலைமைப்பதவி கிடைத்தால்தான் அதனைச் சாதிக்கமுடியும்.

தமிழரசுக் கட்சி இப்போது பாதுகாப்பான நிலையில் இருந்தாலும் அது நிரந்தரமானது அல்ல என்பதை அந்தக் கட்சியினர் இன்னமும் புரிந்து கொள்ளவில்லை. அவர்கள் இன்னமும் தனித்துப் போட்டியிடுவது, தனித்துச் செயற்படுவது பற்றிய கற்பனைகளில் மிதக்கத்தான் செய்கின்றனர்.

அதேவேளை, ரெலோ உருவாக்கிய ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி இந்தத் தேர்தலில் சோபிக்கத் தவறிய நிலையில், ஒற்றை ஆசனத்துடன் செல்வம் அடைக்கலநாதன் தப்பித்துக் கொண்டார். அவருக்குப் பின்னால் அணி திரண்ட கட்சிகள் தோல்வியைச் சந்தித்து இருக்கின்றன.

ஜனாதிபதித் தேர்தலில் பொது வேட்பாளராகப் போட்டியிட்ட அரியநேத்திரனின் சின்னமான சங்கு சின்னத்தை வைத்து வாக்கு சேகரித்தும்கூட, ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியை தமிழ் மக்கள் ஏற்றுக் கொள்ளவில்லை.

இதனால் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியை வலுப்படுத்தப்படுகின்ற முயற்சிகள் பலவீனமடைந்திருக்கிறது.

சங்குக் கூட்டணியில் இடம்பெற்றிருக்கின்ற ஈபிஆர்எல்எப், தமிழ்த் தேசியக் கட்சி, ஜனநாயகப் போராளிகள் கட்சி, புளொட் போன்றன நாடாளுமன்ற தேர்தலுக்குப் பின்னர் கூட்டு செயற்பாடுகளில் அவ்வளவாக ஆர்வமின்றி இருக்கின்றன.

தேர்தலுக்குப் பின்னர், ரெலோ கொஞ்சம் உற்சாகமாக இருக்கிறது. ஏனென்றால், செல்வம் அடைக்கலநாதன் மிகச் சொற்ப வாக்குகள் வித்தியாசத்தில், மிகச் சொற்ப வாக்குகளுடன் நாடாளுமன்றம் சென்று இருக்கிறார். அவருக்கு கட்சிக்குள்ளேயும் நெருக்கடி உருவாகியிருக்கிறது.
இதனைச் சமாளிக்க அவர் நாடாளுமன்றத் தேர்தல் முடிந்த கையுடனே, தமிழ்க் கட்சிகள் கூட்டாகச் செயற்பட வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்தி இருந்தார்.

இப்போது தமிழ்த் தேசியக் கட்சிகள், ஒருங்கிணைந்து செயற்பட வேண்டும் என்றும் ரெலோ அழைப்பு விடுத்துக் கொண்டிருக்கிறது.

சி.வி. விக்னேஸ்வரனின் தமிழ் மக்கள் கூட்டணியும் இனிமேல் தனித்துப் போட்டியிடுவதில்லை என்ற நிலைப்பாட்டுக்கு வந்துவிட்டது.

கிளிநொச்சியில் பெண் ஒருவருக்கு மதுபானசாலை உரிமப் பத்திரம் பெற்றுக் கொடுத்த குற்றச்சாட்டை ஒப்புக்கொண்ட சி.வி. விக்னேஸ்வரன், இப்பொழுது அரசியலில் இருந்து மெல்ல மெல்ல விலகிக்கொள்ளத் தொடங்கி விட்டார்.

முன்னர், வாரம் ஒரு கேள்வி - பதில் அறிக்கையை பத்திரிகைகளுக்குக் கொடுத்த அவர், இப்பொழுது மாதம் ஒன்றாகச் சுருக்கிக் கொண்டிருக்கிறார்.

தான் இன்னமும் இருக்கிறேன் என்று காட்டுவதற்காக அவரது அறிக்கைகள் எப்போதாவது, ஊடகங்களில் வருகின்றன. அதைத்தாண்டி அவர் செயற்பாட்டு அரசியலில் இருந்து ஒதுங்கிக் கொண்டிருக்கின்ற நிலையில், தமிழ் மக்கள் கூட்டணி சட்டத்தரணி மணிவண்ணன் அணியிடம் சிக்கியிருக்கிறது.

அவர்கள் இந்தத் தேர்தலில் தனித்துப் போட்டியிட்டு அடைந்த தோல்வி, இனிமேல் இவ்வாறான ஒரு விஷப் பரீட்சையில் இறங்குவதில்லை என்ற முடிவை எடுக்கத் தூண்டியிருக்கிறது.

அவ்வாறாயின் அடுத்த கட்டமாக என்ன செய்வது என்ற முடிவுக்கு அவர்கள் இன்னமும் வரவில்லை. அவர்களை மீண்டும் கட்சிக்குள் சேர்த்துக்கொள்ள, கஜேந்திரகுமார் தலைமையிலான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தயாராக இல்லை.

தமிழ்த் தேசிய கட்சிகள் அனைத்தும் நாடாளுமன்றத் தேர்தலில் அடிவாங்கி பாடம் கற்றுக்கொண்ட நிலையில், எப்படியாவது ஒரு கூட்டணி சேர்ந்து விட வேண்டும் என திட்டமிட்டிருக்கின்றன.

இந்தச் சூழலில், கிளிநொச்சியில் உள்ள நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரனின் இல்லத்துக்குச் சென்று கஜேந்திரகுமார் பொன்னம்பலம் சினேகபூர்வமான உரையாடலை ஆரம்பித்திருக்கிறார்.

கஜேந்திரகுமார் பொன்னம்பலம் இப்பொழுது நிலைமைகளைப் புரிந்து கொள்ள தொடங்கி இருக்கிறார். அவர் தமிழ் மக்களின் எதிர்காலம் குறித்து அதிகம் சிந்திப்பதாகத் தெரிகிறது.

அவருக்கு ஏற்பட்ட உடல்நலக் குறைவில் இருந்து தற்காலிகமாக மீண்டிருந்தாலும், அது அவருக்குள் நம்பிக்கையற்ற நிலையை உருவாக்கி இருக்கிறது.

இப்படிப்பட்ட சூழலில், இனத்தின் எதிர்காலத்திற்காக எதையாவது செய்ய வேண்டும் என்ற முனைப்பில் அவர் இறங்கி இருக்கிறார்.

நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரனைச் சந்தித்து சமஸ்டி தீர்வு தொடர்பாக முன்னர் தமிழ் மக்கள் பேரவை தயாரித்த தீர்வுத் திட்ட வரைவை, தமிழர் தரப்பு ஒருமித்து முன்வைப்பதற்கான வாய்ப்புகள் குறித்துப் பேசி இருக்கிறார்.

இந்தச் சந்திப்புக்கு மூன்றாவது தரப்பு அடித்தளமிட்டுக் கொடுத்திருந்தாலும், கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தனது நிலைப்பாட்டில் இருந்து இறங்கி, சிறிதரனைச் சென்று சந்தித்திருக்கிறார்.

அடுத்த கட்டமாக அவர், ரெலோ தலைவர் செல்வம் அடைக்கல நாதனுடனும் பேச்சு நடத்தியிருக்கிறார்.

அரசியல் ரீதியாக ஒன்றுபட்டு செயற்படுதல் என்பது அரசியல் கூட்டணி அமைத்துக் கொள்வதை மாத்திரம் அர்த்தப்படுத்தாது.

கொள்கை ரீதியாக - தமிழ் மக்களின் பிரச்சினைகள் ரீதியாக - அவற்றுக்கு தீர்வைப் பெற்றுக் கொடுக்கும் வழிமுறைகள் ரீதியாக - ஒன்றுபட்டு செயல்படுவது தான் முக்கியமானது.

தேர்தல்கள் வரும், வராமல் போகும், அடுத்த முறையும் வரும். ஆனால் கொள்கை மற்றும் உரிமை சார்ந்த பிரச்சினைகள் விடயத்தில், இழக்கப் பட்டதை மீளப் பெற்றுக்கொள்வது என்பது மிகவும் கடினமானது.

வடக்கு, கிழக்கு இணைப்பை இழந்த பின்னர் அதனை மீளப் பெறுவதற்கான வழிமுறை தெரியாமல் இன்றுவரை தமிழர் இருக்கின்றனர்.

ஒரு மிகப்பெரிய ஆயுதப் போராட்டத்தின் வலிமையை இழந்த பின்னர், அதனை ஈடுசெய்ய வழிதெரியாமல் இருக்கின்றனர். எனவே, கொள்கை ரீதியாகவும் சரி, உரிமை ரீதியாகவும் சரி, ஒன்றுபட்டுச் செயல்படுவதற்கான சூழலை உருவாக்கிக் கொள்வதுதான் முக்கியமானது என்பதில் பெரும்பாலான தமிழ்த் தேசியக் கட்சிகள் ஒருமித்த நிலைப்பாட்டுக்கு வந்திருக்கின்றன.

ஆனால் எப்படி ஒன்று சேர்வது - எப்படி அதற்கான தளத்தை உருவாக்குவது என்பதுதான் பிரச்சினையாக இருக்கிறது.

பூனைக்கு மணி கட்டுகின்ற ஒருவர் வந்து சேருகின்றபோது, அது நடந்தேறுவதற்கான வாய்ப்பு அதிகமாகவே தென்படுகிறது.

ஏனென்றால், நாடாளுமன்றத் தேர்தலில் அத்தனை தமிழ்த் தேசியக் கட்சிகளும் கடுமையான பாடம் படித்திருக்கின்றன. அவர்கள் இன்னொரு கசப்பான பாடத்தைக் கற்றுக்கொள்வதற்கு விரும்ப மாட்டார்கள்.



# தமிழரின் வாழ்விடங்களும், கல்வியும்



பேராசிரியர்
மா. சின்னத்தம்பி

## கடந்த இதழ் தொடர்ச்சி...

### 1.4 கிழக்கு இலங்கைப் பிரதேச கல்வி நிலை

புவியியல், பொருளாதார, பண்பாட்டு விடயங்களின் அடிப்படையில் வடபகுதியை விடவும் மிகவும் வேறுபட்ட பிரதேசம் கிழக்கு இலங்கையாகும். தனித்தன்மைகள் பல கொண்டது.

மிகவும் நீளமான செழிப்பான கடற்கரை கொண்டது, மிகவும் செழிப்பான விவசாய நிலங்கள் கொண்டது. அம்பாறை மாவட்டம் மிகவும் செழிப்பான விவசாய பூமியாகும். இதனாலன்றோ சுதந்திர இலங்கையின் பிரதமர் திரு. D.S. சேன நாயக்க சிங்களக் குடியேற்றத்தை சுதந்திரம் பெற்ற ஆண்டிலேயே இங்கே தொடங்கினார். மீன்பிடியும் விவசாயமும் தமிழர், இஸ்லாமியர் மற்றும் இனத்தவர் களால் நீண்டகாலம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

திருகோணமலைத் துறைமுகம் சர்வதேச அரசியல் பொருளாதார கவன வீச்சை அதிகம் கொண்டுள்ளது. இலங்கையின் மிகப் பெரிய நதியான மகாவலி கங்கை இங்குதான் முடிவடைகின்றது. மகாவலி கங்கை மிகப்பெரிய நதி நீர்த்திட்டத்தின் ஜீவனாகும்.

பேசும் மொழி, உற்பத்திகள் வாழ்வு, பண்பாட்டு உணர்வு என்பவற்றில் பல தனித்தன்மைகள் காணப்படுகின்றன. தமிழருக்கும் இஸ்லாமியருக்குமான சமூக நெருக்கம் மிக அதிகமாகும். ஆயுதப் போராட்டத்துடன் முரண்பட்ட திசைகளில் அந்த உறவுகள் நகரத் தொடங்கிவிட்டன. ஊர்களின் பெயர்களில் தனித்துவ வரலாற்று உண்மைகள் உறங்கிக் கிடக்கின்றன.

சொத்துப் பரிமாற்றம் தொடர்பாக யாழ்ப்பாணத்தில் தேச வழமைச்சட்டம் இருப்பதுபோல் இங்கு முக்குவர் சட்டம் (1907) டச்சுக்காரர் காலத்திலிருந்து முதன்மை பெற்றுள்ளது.



சுவாமி விபுலானந்தர் இப்பிரதேச ஞான ஒளியின் மூலமாக மதிக்கப்படுகிறார். தமிழ்நாடு அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் தமிழ் பேராசிரியராகப் பணியாற்றியவர். புகழ்பெற்ற யாழ் நூலை இயற்றியவர். இவரது பெயரில் ஓர் அழகியல் கல்விப்பீடம் இயங்கி வருகிறது.

AMM அனீஸ், பெரியதம்பிப் புலவர் போன்ற கல்விமான்களும் இப்பகுதியில் புகழ்பெற்றவர்கள்.

செழிப்பான மண்வளமும், விவசாயச் செழிப்பும் இருந்ததால் கல்விக்குரிய முன்னுரிமை காலம் தாழ்ந்தே உணரப் பட்டது என்ற கருத்தும் நிலவுகிறது.

இங்கு சிறப்பான கல்விச் சூழல் இப்போது வளர்ந்துவிட்டது. முன்பைவிட கடந்த இரு தசாப்தங்களில் இஸ்லாமிய மக்களிடம் உயர்கல்வி நாட்டமும் ஊக்கமும் வளர்ச்சியும் மிகவும் குறிப்பிடத்தக்கன. 1960களில் என்னுடன் படித்து அரச சேவையில் பணியாற்றிய நண்பர் முஃதார் சொல்வார், "வணிகம் செய்யும் திறமை இல்லாதோரே குறைந்த வருமானம் தருகின்ற அரச வேலைகளில் இணைந்து கொள்கின்றனர்" என்று சமூகம் நம்புகிறது என்பார்.

இதே மாதிரி சமூக கருத்தியல் மலை நாட்டு இந்திய வணிக சமூகத்தினரிடை யிலும் நிலவி வந்ததாக பேராசிரியர் சோ. சந்திரசேகரம் குறிப்பிடுவார்.

கல்வியின் பயன்களில் பொருளாதார நலன்களுக்குப் புறம்பான சமுதாய வல்லமை (Social power) என்ற ஒன்றும் இருப்பதைக் காலம் தாழ்ந்துதான் சில சமூகங்கள் உணர்ந்திருக்கின்றன.

இன்று இஸ்லாமியரின் சிந்தனை, அரசியல் என்பவற்றில் பெரிய மாறுதல்கள் ஏற்பட்டுள்ளன. 1960களில் கிழக்கில் தமிழரசுக் கட்சியிலும் மேற்கில் ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் சிறீலங்கா சுதந்திரக் கட்சியிலும் இயங்கியவர்கள் இப்போது தமக்குரிய தனித்துவமுடைய பல கட்சிகளைத் தாபித்து தனித்துவ சிறப்புடன் வளர்ந்துள்ளனர். அரபு நாடு களின் தொழில் வாய்ப்பும், உதவியும் மேலும் துணை செய்கிறது. இது 1975 களின் பின் சிறப்பாக வெளிப்படுகிறது.

கிழக்கு மாகாணக் கல்விச் சிறப்பில், தமிழ் மொழியைத் தாய் மொழியாகக் கொண்ட இந்துக்கள், இஸ்லாமியர், கிறிஸ்தவர் போன்ற பலரும் பெற்றுள்ள வளர்ச்சி சிறப்பானது. இதற்குப் பங்களிப்பு செய்து வரும் நிறுவனங்கள் மற்றும் செயற்பாடுகளைப் பின்வருமாறு குறிப்பிடலாம்.

* இராமகிருஷ்ண மிஷனின் ஊக்கம், மற்றும் உதவியால் பெரிய பாடசாலைகள் தொடங்கி வளர்ச்சி பெற்றுள்ளது.

* கிறிஸ்தவ மிஷனரியினரின் பெரிய பாடசாலைகள் பலவும் சிறப்பான கல்வியை வழங்கி வருகின்றன.

* இஸ்லாமியப் பாடசாலைகளும், மதறசாக்களும் நல்ல வளர்ச்சியைப் பெற்று சிறப்புடன் இயங்குகின்றன.

* ஆசிரியப் பயிற்சிக் கலாசாலையும், கல்வியியல் கல்லூரிகள் இரண்டும் ஆசிரியக் கல்வியை மேம்படுத்தி வருகின்றன.

* பல்கலைக்கழகக் கல்லூரி ஒன்றும் தொழில்நுட்பப் பட்டம் வழங்கும் இலக்குடன் செயல்படுகிறது.



* கிழக்கிலங்கைப் பல்கலைக் கழகமும், தென்கிழக்கு பல்கலைக் கழகமும் எல்லாப் பீடங்களையும் கொண்டனவாக இயங்கி வருகின்றன.

இஸ்லாமிய தனியார் பல்கலைக் கழகம் தொடங்கும் முயற்சிகள் முற்றுப்பெறாமல் தடைப்பட்டுள்ளது.

* சுற்றுலாத்துறை, கடல்வளத்துறை சார்ந்த தொழில்வாய்ப்பு மற்றும் ஆராய்ச்சிகளுக்கு முன்னுரிமை வழங்கும் உயர்கல்வி சார்ந்த நிறுவனங்கள் மற்றும் செயற்திட்டங்களும் அதிகரித்து வருகின்றன.

இஸ்லாமியத் தமிழரில் உயர்கல்வி ஊக்கம் கடந்த தசாப்த காலத்தில் பலமடங்கு அதிகரித்துள்ளன. குறிப்பாகப் பெண்கள் மருத்துவம், பொறியியல், சட்டம், முகாமைத்துவம் போன்ற துறை களில் கற்கும் ஆர்வத்துடன் பல்கலைக் கழகம் நுழையும் வேகம் அதிகரித்துள்ளது. இதற்கான கற்றல் ஊக்கம், மற்றும் உதவிகள் வழங்குவதில் ஏராளமான சமுதாய அமைப்புக்கள் ஈடுபடுவது பெருமைப்படத்தக்கதாகும்.

அரபு நாடுகளில் வேலைவாய்ப்பு, பெண்களின் உயர்கல்வி மேம்பாடு, பல்கலைக்கழகக் கல்வி விரிவாக்கம், கல்வி கற்க ஊக்கமளிக்கும் சமூகக் கட்டமைப்பு வளர்ச்சி என்பன இஸ்லாமிய சமுதாயத்தில் கல்வி தொடர்பான புதிய முன்னேற்றங்களாகத் தென்படுகின்றன.

இவர்களும், கிழக்கு மாகாணத் தமிழரும் கூட புலம்பெயர்வதில் அதிக அக்கறை கொண்டுள்ளனர்.

1983 - 2019 கால அமைதியின்மையில் அதிகளவில் பாதிக்கப்பட்ட கிழக்கு மாகாணத் தமிழரும், இஸ்லாமியரும் உள்நாட்டில் கல்வி வளர்ச்சியை ஊக்குவிப்பதில் தற்போது அதிக கவனம் செலுத்துகின்றனர்.

இதேபோல் புலம்பெயர்ந்து கனடா மற்றும் அவுஸ்திரேலியா, ஐரோப்பிய நாடு களுக்கும் செல்வதில் அதிக முனைப்புக் காட்டி வருகின்றனர். புலம்பெயர்ந்து வெளிநாடுகளில் வாழ்வோரும் தமது தாய் நிலக் கல்வி மேம்பாட்டுக்கு விரிவான பல் முனைப்பட்ட உதவிகளையும் வழங்கி வருகின்றனர்

(தொடரும்)

# சாதனையின் உச்சம்

அறிவே; ஆகாயமே; மென்மையே;
மன உறுதி தளம்பாத இமயமே;
நீ நினைத்திருந்தால்!

கடல் மழை காற்று நெருப்பு
எழுச்சிகளிலும் மேலான
வீரியம் மிக்கதொரு
போர் வீரர்களைத் திரட்டி
வாள்வீசி வேலெறிந்து அம்பு எய்து
தீயோரின் தசை எலும்பு நரம்புகளை
உரமாக்கி
நன்செய் புன்செய் பெரு வெளிகளை
வளம் கொண்ட பயன்தரு
நிலங்களாக்கி இருக்கலாம்.

உரம்கொண்ட உன் உடலில்
ஆணிகளை அறையத் தயாராகும்
அந்த இறுதிக் கணத்திலாவது
தோளிற் காவிச்சென்ற
சிலுவைக்கட்டையால்
எதிரிகளை அடித்து நொருக்கித்
துவந்தயுத்தம் செய்து;
நீதியான ஆட்சியை நிலைநாட்டி
இருக்கலாம்.



ஆனால்;
விண்ணில் சுழன்று பயணிக்கின்ற
இந்தப் பூகோளக்கல்லில்
உனது இரத்த உளியால்
'பொறுமை' எனும் மூன்றெழுத்து
அழியாதவாறு நீ பொழிந்து வைத்து
வரலாறு படைத்துச் சென்றாய்.

மனித நேயத்தில் சம நோக்கில்
கருணையில் நீதி நியாயத்தில்
இரக்கத்தில்
இன்னும் முழுமைபெறாத
மனித இனத்தைப் பார்த்து,
பிரபஞ்சம் கண்ணீர்
விடுகின்றது;



முத்துராஜா

# நாமும் நமது இல்லமும் 668

# 2025ஆம் ஆண்டில் வியாபார ஆதனம் அதிகரிக்கும்



ராஜா மகேந்திரன்
raja@mahendran.ca
416.315.9397/416.321.6969

2025ஆம் ஆண்டில் வியாபார ஆதனத்தில் (Commercial) (CRE = Commercial Real Estate) வளர்ச்சி ஏற்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இதற்கு முக்கிய காரணமாக, அடமானக்கடனில் ஏற்பட்டு வரும் வட்டிவீத இறக்கமே. ஏற்கனவே அதிகூடிய வட்டி வீதத்திலிருந்து, வட்டி வீதம் இறங்கி வருவதனைக் காணலாம். இந்த இறக்கம் மேலும் தொடரலாம் என்பதும் காரணமாகும். கடந்த மூன்று (3) வருடங்களில் கனடிய மத்திய வங்கியின் வட்டிவீதம் 0.25%இலிருந்து 5%வரை 10 தடவை அதிகரிக்கப்பட்டது. இப்பொழுது வட்டி வீதம் கீழ்நோக்கி வந்து கொண்டிருக்கின்றது. ஒக்ரோபர் 2024ஆம் ஆண்டில் வங்கியின் வட்டி வீதம் 0.5%இனால் குறைக்கப்பட்டு 3.75%ஆகக் காணப்பட்டது.

மேலும், டிசெம்பர் 11, 2024அன்று மேலும் 0.5% குறைக்கப்பட்டு, இப்பொழுது கனடிய மத்திய வங்கியின் வட்டிவீதம் 3.25%ஆக உள்ளது.

கடந்த சில வருடங்களில் ஏற்பட்ட வட்டி வீத அதிகரிப்பினால் முதலீட்டாளர்கள் வியாபார ஆதனத்தில் முதலிடுவதனையும் (Commercial Real Esate) வியாபாரத்தில் முதலிடுவதனையும் நிறுத்தி வைத்திருந்தனர். இன்றைய வட்டிவீதம் சாதகமாக வருவதனால், முதலீட்டாளர்களை ஆதனச் சந்தையில் காணக்கூடியதாக இருக்கின்றது.

## அலுவலக ஆதனம்

இன்றைய காலத்தில் அலுவலக (Office Real Estate) ஆதன வியாபாரமும் முற்றாக நிறுத்தப்பட்டதாகவே கருதவேண்டி உள்ளது. அலுவலகக் கட்டிடத் தொகுதிகளில் (Office Towers) அதிகளவு எண்ணிக்கையான அலுவலகங்கள் வெறிச்சோடியே காணப்படுகின்றன. தகுந்த, சரியான முதலீட்டாளர்கள் அல்லது அலுவலக நிறுவனங்களைக் கண்டுபிடிக்க முடியவில்லை. இதற்கு அதிகமான தொழிலாளர்கள் வீடு மற்றும் மனையில் இருந்து தொழில்புரிவதால் வாடகைக்குக் கொடுப்பது இலகுவானதாக இல்லை. இந்தவகை கட்டிடத் தொகுதிகளின் உரிமையாளர்களின் நிதி நிலைமை இறுக்கமடைவதைக் காணலாம்.

கடந்த ஆண்டுகளில் (4, 5) தொழில் நிறுவனங்கள் வீட்டில் இருந்தும், அலுவலகத்திற்குச் சென்றும் தொழில் புரிவதனைக் (Hybrid) காணக்கூடியதாக இருக்கிறது. எதிர்கால நிலைப்பாடாக இருக்கலாம் என முடிவு தெரிகின்றது.

இதனால் முற்றாக அலுவலக வியாபாரத்திற்காக ஒதுக்கப்பட்ட அல்லது நிர்மாணிக்கப்பட்ட கட்டிடத்தொகுதிகள் எதிர்காலத்தில் முழுவதுமாக வாடகைக்குக் கொடுக்க முடியுமா என்பது கேள்விக்குறி.



அலுவலக அடுக்கு மாடி அலகுகளை எதிர்காலத்தில் முற்றாக வாடகைக்குக் கொடுப்பது என்பது இயல்பாக இருக்காது. இதில் சில அலுவலகக் கட்டிடத் தொகுதிகள், மக்கள் வாழக்கூடிய அடுக்குமாடி மனைத் தொகுதிகளாக (Condo Units) மாற்றப்படலாம்.

இதனால் இவ்வாறான அலுவலக அடுக்குமாடித் தொகுதிகளை இலகுவாக குடிமனைகளாக மாற்றுவதற்கு அரசுகளின் சட்டங்கள் இலகுவாக்கப்பட வேண்டும். இதற்கு மூன்று அரசுகளும் உதவலாம் என்பதே இன்றைய கருத்தாக உள்ளது.

கனடியப் பொருளாதார மந்த நிலையாலும், வியாபாரத்திற்கு உகந்த சூழ்நிலை இல்லாமல் இருப்பதாலும் சிறுதொழில் உருவாக்கக்கூடிய (Industrial Market) வியாபார நிலையங்களின் தேவை குறைந்தே வருகின்றது. 2025இல் எவ்வாறு இருக்கலாம்?

எனினும் சிறிய வியாபார ஆதனச் சந்தைக்குரிய (Retail Market) நிலையங்களின் நிலைமை சிறப்பாகவே காணப்படலாம்.

சிறியவகை வியாபாரத்தில் வடஅமெரிக்காவில் (கனடா, அமெரிக்கா மற்றும் மெக்சிக்கோ நாடுகளில்) கனடாவே முதல் இடத்தில் உள்ளது.

உதாரணமாக ரொறொன்ரோ, மொன்றியல், வன்கூவர் மற்றும் ஒட்டாவா போன்ற நகரங்களில் சிறிய வியாபாரத்திற்குரிய இடங்களை வாடகைக்குப் பெறுவது கடினமாக உள்ளது. இதற்குரிய காரணமாக இன்றையச் சூழலின் Vacancy Rate 3%இற்குக் குறைவாகவே உள்ளது. அத்துடன் புதிதாக சிறிய, சில்லறை வியாபார நிலையக் கட்டிடங்கள் அமைப்பதும் குறைந்துள்ளது. 2025ஆம் ஆண்டு ஆதன வியாபாரத்தில் மாற்றமுள்ள ஆண்டாக எதிர்பார்க்கலாம். இதற்கேற்ப சூழ்நிலைகள் உருவாக்கப்படல் வேண்டும்.

## டிசெம்பர் 15, 2024இல் அடமானக் கடன் மாற்றம்

அடமானக்கடன் பெறுவதில் டிசெம்பர் 15, 2024இலிருந்து மாற்றம் ஏற்பட உள்ளது. இதுவரை $1 மில்லியனிற்குக் குறைவாக உள்ள ஆதனங்களிற்கே 20% முஆரம்ப முதலீட்டுடன் (Down payment) அல்லது அதற்குக் குறைவாக முதலிடும் போதே அடமானக் கடன் காப்புறுதி (Default Insurance) கிடைக்கக்கூடிய வசதி காணப்பட்டது.

$1 மில்லியனின் பெறுமதி $1.5 மில்லியன்வரை டிசெம்பர் 15, 2024 இலிருந்து அதிகரிக்கப்படுகின்றது. இதனால் மேலும் பலர் 20% முதலீட்டிற்குக் குறைவாக முதலீடு செய்து (Down payment) $1.5 மில்லியன் வரையான ஆதனங்களை வாங்கக்கூடியதாக உள்ளது.

அத்துடன் இந்த அடமானக் கடன் திருப்பி கொடுக்கும் காலம் (Amortization) 30 ஆண்டுகள்வரை நீடிக்கப்படுகின்றது.

# புதிய அரசும்...

04ஆம் பக்கத்தொடர்ச்சி

அதற்குக் காரணம், நிர்வாக விடயங்களில் போதிய அனுபவம் இவர்களிடம் கிடையாது. நாடாளுமன்றத்துக்குள் வந்தவர்கள் கூட, பெரும்பாலானோர் புதியவர்கள்.

அவர்களுக்கு நாடாளுமன்ற நடைமுறைகள் தெரியாது, நாடாளுமன்றத்துக்குள் எவ்வாறு பேசுவது எவ்வாறு நடந்து கொள்வது, எதை எதையெல்லாம் செய்யக்கூடாது என்பதுகூடத் தெரியாது.

தான் கலாநிதித் பட்டத்தைப் பெற்றவர் என, இந்த அரசாங்கத்தில் சபாநாயகராக நியமிக்கப்பட்ட அசோக ரன்வல ஆவணங்களில் குறிப்பிட்டிருந்தார். ஆனால் அந்த விவகாரம் இப்பொழுது சர்ச்சைக்கு உள்ளாகியிருக்கிறது.

ஜப்பானில் கலாநிதிப் பட்டப்படிப்பை பூர்த்தி செய்ததாக அவர் கூறியிருந்தாலும், நாடாளுமன்ற இணையதளத்தில் அவரது பெயருக்கு முன்பாகப் போடப்பட்டிருந்த கலாநிதிப்பட்டம் இப்போது அகற்றப்பட்டிருக்கிறது.

அது குறித்து எழும் கேள்விகளுக்கு அவர் பதில் அளிக்காமல் நழுவிக் கொண்டிருக்கிறார்.

இவை எல்லாம் தேசிய மக்கள் சக்தி தொடர்பாகக் காணப்பட்ட, நேர்மறை விம்பம் கொஞ்சம் கொஞ்சமாக நொறுங்கிக் கொண்டிருப்பதையே எடுத்துக் காட்டுகின்றன.



தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் முதலில் ஆட்சி அதிகாரத்தை உறுதியாக முன்னெடுப்பதற்காகத் தன்னைத் தயார்படுத்திக் கொள்ளவேண்டும். அதற்குப் பின்னர்தான் இறுக்கமான செயற்பாடுகளில் இறங்க முடியும்.

அதுவரையில் அந்த அரசாங்கத்தினால் மக்கள் எதிர்பார்க்கின்ற மாற்றங்களை உருவாக்க முடியாது.

அந்தக் காலகட்டம் வரும்வரை தேசிய மக்கள் சக்தியை நோக்கிய எதிர்பார்ப்புகள் தொடரத்தான் செய்யும்.



# அமெரிக்க அபத்தம் சிரியா

## ரதன்

சிரியா மத்திய கிழக்கின் ஒரு முக்கியமான அதேசமயம் சர்ச்சைகளுக்குரிய நாடு. சிரியா அமைந்திருக்கும் இடமும் அதன் சர்ச்சைகளுக்கு ஒரு காரணம். சிரியாவின் ஓர் எல்லையில் துருக்கி உள்ளது. சிரியாவின் மற்றைய எல்லை நாடுகளாக ஈராக், ஜோர்டான், இஸ்ரேல், மத்தியதரைக் கடல் உள்ளன.

சிரியா பல இனக்குழுக்களைக்கொண்ட நாடு. பாலஸ்தீனியர்கள் பலர் அகதிகளாக வாழ்கின்றனர். அரபு மக்கள் (80%) அதிகமாக வாழ்கின்றனர். இவர்களில் பல பிரிவுகள் உள்ளன (Alawite, Shia, and Sunni). சிரியாவின் வடகிழக்குப் பகுதிகளில் குர்தீஸ் மக்கள் வாழ்கின்றனர். Chechens ஆமேனியர்கள், Yazidis (குர்தீஸ் மக்களில் ஒரு பிரிவு) இவர்களை விட பல முதல் குடிகள் - பூர்விக மக்கள் (Shammar confederacy, the Dana Bishr, the Dana Muslim, the Tayy, the Hadidiyyin, the Mawali, the Abu Sha'ban, and the Uqaydat) உள்ளனர். இவர்களுடன் துருக்கியர்களும் வாழ்கின்றனர்.

2 Bedrooms in Upstairs & 2 Bedrooms in a bsmt for rent. Shared washroom & kitchen. Male only. Close to TTC, Centennial College & grocery shopping. Avail. immediately.

தொடர்புகளுக்கு: **416.837.1860**

## ROOM FOR RENT

**MCCOWAN & DENISON**

1 Bedroom for rent. 1 Bachelor apartment for rent. All inclusive. Avail. immediately.

**416.522.3314/437.219.3329**

## ROOM FOR RENT

**MARKHAM & DENISON**

2 Rooms available in main floor. Close to all facilities. Avail. immediately.

**647.858.2290 /647.534.9897**

## ROOM FOR RENT

**CONLINS & SHEPPARD**

Rooms for rent. Shared kitchen & washroom & 1 parking.Close to U of T. Single room $800, shared room $900. Avail. immediately.

தொடர்புகளுக்கு: **416.805.3355**

## ROOM FOR RENT

**MARKHAM & STEELES**

பகுதியிலுள்ள வீட்டில் 2 அறைகள் உடனடியாக வாடகைக்கு உண்டு. பெண்கள் விரும்பத்தக்கது. அருகில் bus மற்றும் ஏனைய அனைத்து வசதிகளும் உண்டு.

தொடர்புகளுக்கு:**416.846.6093**

## BASEMENT & ROOM FOR RENT

**CHURCH & KINGSTON (AJAX)**

2 Bedrooms bsmt for rent. 2 Bed rooms for rent in upstairs. Parking available. Close to TTC & all facilities. No pets & no smoking. Avail. immediately.

**647.869.1252/ 416.844.9102**

## ROOM FOR RENT

**MARKHAM & LAWRENCE**

1 Bedroom for rent in a bsmt. Sep. washroom & 1 parking. Female preferred. Close to TTC, Mall & all facilities Avail. immediately.

**416.930.5307 /416.829.0875**

## ROOM FOR RENT

**WILLOWLEA DR. & ELLESMERE**

1 Bedroom for rent in a 2 bed rooms bsmt. Sharing washroom & kitchen. Close to 24 hrs. bus service, Scar. university & cen tennial college. Avail immediately.

தொடர்புகளுக்கு:**416.305.5158**

## BASEMENT / ROOM FOR RENT

**MORNINGSIDE & SHEPPARD**

3 Bedrooms bsmt for rent. 1 Bedroom for rent in upstairs. In front of bus stop. Avail. immediately.

**647.231.2637/647.766.7089**

## ROOM FOR RENT

**WARDEN & ST. CLAIR**

3 Rooms for rent in a main floor. Parking available. Ladies only. Close to Warden subway & all facilities. Avail. immediately.

தொடர்புகளுக்கு: **416.288.8286**

## ROOM FOR RENT

**MORNINGSIDE & STAINES**

1 Bedroom for rent in a main floor. Close to all facilities. Avail. immediately.

தொடர்புகளுக்கு:**647.888.9437**

## BASEMENT/ROOM FOR RENT

**MARKHAM & SHEPPARD**

3 Bedrooms & 2 washrooms bsmt for rent. Rent $2,200 +utility.

**MARKHAM & DENISON**

1 Very large bedroom Rent $1,400. 2 Male preferred. Rooms available $500 & $600. No alcohol, no pets & no smoking. Avail.immediately.

**647.507.2148/647.864.1051**

## CONDO. FOR RENT
**NEILSON & MCLEVIN**
480 Mclevin Ave. - 1 Bedroom & 1 washrooms condo. for rent. 1 parking included. Close to Malvern mall & all facilities.
Avail. January 05, 2025.
**Pls. Contact: 416.560.0327**

## HOUSE FOR RENT
**MARKHAM & DENISON**
4 Bedrooms & 4 washrooms less than 3 years old, whole house for rent. Rent - $3,300. Close to Costco. Avail. immediately.
தொடர்புகளுக்கு:**416.275.5788**

## HOUSE & BASEMENT FOR RENT
**MARKHAM & DENISON**
3 Bedrooms house & 2 Bed rooms bsmt for rent. Close to Costco & all facilities.
Avail. immediately.
தொடர்புகளுக்கு:**647.764.5246**

## PICKUP & DROP OFF
Do you need pickup and drop-off for holiday party or Airport.
பாதுகாப்பான, நேரம் தவறாத நியாய கட்டண வாகன சேவை
Safe, affordable and punctual service.
**Contact : 647.205.8317**

## CONDO. FOR RENT
**MARKHAM & ELLESMERE**
2 Bedrooms + Den & 2 wash rooms condo. for rent. 1 parking & storage. Close to Subway, pharmacy & convenience store.
Avail. immediately.
தொடர்புகளுக்கு: **437.908.2110**

## HOUSE FOR RENT
**CHURCH & DELANEY(AJAX)**
3 Bedrooms house & 1 Bedroom bsmt for rent. 3.5 washrooms & 2 Parking. No pets & no smoking. Close to bus stop, high school, elementary school & all amenities.
Avail. immediately.
**905.626.8410/416.317.0568**

## HOUSE FOR RENT
**WHITES & TAUNTON**
3 Bedrooms & 2.5 washrooms house for rent. 5 Min. walk to bus stop. School bus facilities available. Avail. immediately.
**647.535.9630/416.887.8905**

## WORKER தேவை
**Construction**
வேலைக்கு ஆட்கள் தேவை.
**Location: MARKHAM & PROGRESS**
அனுபவம் தேவை
தொடர்புகளுக்கு: **647.514.0431**

## CONDO. FOR RENT
**KENNEDY & MCNICOLL**
2 Bedrooms & 2 wash rooms condo. for rent. Close to TTC & all facilities. Avail. immediately.
**Contact: Kumar :437.993.0192**

## HOUSE FOR RENT
**MARKHAM & ELLESMERE**
3 Bedrooms & 1 full washroom bangalow house main floor for rent. 5 min. walking distance to Bus, school, bank, mall, HWY 401 & other facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு:**647.996.6977**

## HOUSE FOR RENT
**SCAR. GOLF CLUB & BRIMORTON**
3 Bedrooms furnished bangalow house for rent. 1 washroom & 1 parking. Close to bus stop & all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.276.9503**

## தையல்
**Stouffville GTA** பகுதியில் பெண்களுக்கான சாறி பிளவுஸ் மற்றும் பெண் பிள்ளைகளுக்கான சட்டை மற்றும் சகலவிதமான ஆடைகளும் குறைந்த கட்டணத் துடன் தைத்துக் கொடுக்கப்படும்.
ஜெயா : **416.669.6370**

## HOUSE FOR RENT
**MORNINGSIDE & SHEPPARD**
3 Bedrooms & 2 full washrooms Town house for rent. (1800Sq.ft) 1 Parking. 1 Min walking to bus stop (24X7) & all amenities.
Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.455.7961**

## HOUSE FOR RENT
**WARDEN & LAWRENCE**
6 Bedrooms 2 story house for rent. 3 Washrooms & 2 Living rooms. Close to TTC, Shopping mall & etc. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.854.5171**

## HOUSE FOR RENT
**CROW TRAIL & FINCH**
**SCARBOROUGH**
3 Bedrooms house with bsmt full house for rent. 2 washroom, 1 Garage + 2 parking. Close to Malvern mall. Avail. immediately.
**416.809.6145/416.856.6145**

## FUNDING $ AVAILABLE
கடன் வசதி உண்டு
Funding available for basement $80,000
தொடர்புகளுக்கு: **647.514.0431**

## HOUSE, CONDO. & BASEMENT FOR RENT
**BROCK & TAUNTON (PICKERING) -** 4 Bedrooms & 4 washrooms brand new house for rent.
**PHARMACY & SHEPPARD (SCARBOROUGH)-** 2 Bedrooms & 2 washrooms brand new condo. for rent.
**SCAR. GOLF CLUB & ELLESMERE -** 4 Bedrooms & 2 washrooms brand new basement for rent.
**Please call or text - 647.269.0193**

## HOUSE FOR RENT
**MARKHAM & 14TH AVENUE**
4 Bedrooms & 2.5 washrooms house for rent. 2 Parking. Close to Aaniin community centre, high school & all facilities.
Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.762.5804**

## HOUSE/BASEMENT FOR RENT
**MARKHAM & DENISON**
4 Bedrooms house for rent.
**STAINES&MORNINGSIDE**
2 Bedroom walkout basement for rent. 3 Bedrooms house for rent.
**Contact: 647.686.8590**

## HOUSE FOR RENT
**MORNINGSIDE & SHEPPARD**
3 Bedrooms town house for rent. 1 Parking. Close to TTC. Walking distance to U of T & school. Avail. immediately.
**SAM - 416.837.0927/ 437.925.8172**

## HOUSE FOR RENT
**BRIMLEY & LAWRENCE**
3 Bedrooms house for rent. 2 Min walk to bus stop & park. Close to all facilities.
Avail. immediately.
தொடர்புகளுக்கு:**416.399.2416**

## HOUSE FOR RENT
**MARKHAM & HWY 7**
3 Bedrooms bungalow house for rent. Close to all facilities.
Avail. February 01, 2025.
தொடர்புகளுக்கு:**647.883.1054**

## HOUSE & ROOM FOR RENT
**OSHAWA** - 4 Bedrooms detached house for rent. 2 washrooms, 3 parking. Close to University & other facilities. அறைகள் தனித்தனியாகவும் கொடுக்கப்படும்.
**PETERBOROUGH** - 4 Bedrooms & 2 washrooms detached house for rent.
**BEAVERTON** - 4 Bedrooms house for rent.
**WARDEN & FINCH** - 2 Rooms for rent in a Condo..
**STAYNER** - 5 Bedrooms house for rent.
தொடர்புகளுக்கு: **647.702.2159/ 647.706.5191**

## BUSINESS FOR SALE - வியாபாரம் விற்பனை
**நாதஸ்வர தவில் இசை சர்வதேச இசை அமைப்பு**
Nathaswara Thavil Music of Global Inc. என்ற அமைப்பு விற்பனைக்கு உண்டு. இவ் அமைப்பின்மூலம் விசாக்களைப் பெற்று வெளிநாட்டுக் கலைஞர்களை கனடா விற்கு அழைக்க முடியும். Embassyஇல் நல்ல வரவேற்பு உள்ளது. மேலும் விபரங்களை அறிய
ஆ.முருகதாஸ்: **416.420.1309**

## நியூ ரங்கனாஸ் நகைமாடம்

NEW RANGANAS JEWEL HOUSE • SINCE 1996

* திருமணத்திற்கான தாலிக்கொடி, மற்றும் அனைத்து நகைகளையும் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ள
* தங்கநகை அடகுச் சேவை.
* பழைய தங்கநகைகள் விற்பனை

CASH FOR GOL



மேலதிக விபரங்களுக்கு
**647.702.2159**
நியூ ரங்கனாஸ் நகைமாடம்
மார்க்கம் & ஸ்ரீல்ஸ்

## பலகாரத் தேவைகளுக்கு

ரவை லட்டு, கேசரி, தொதல், அரியதரம், பயத்தம் பலகாரம் போன்ற பலகார வகைத் தேவைகளுக்கு

அழையுங்கள்: **647.765.2250**

## சமையல் வேலைக்கு ஆள் தேவை

Markham பகுதியிலுள்ள தமிழ் Restaurant ஒன்றிற்கு இலங்கை, இந்திய உணவுகளைத் தயாரிப்பதில் அனுபவமுள்ள சமையல் ஆட்கள் தேவை. முன் அனுபவமுள்ள இருபாலாரும் தொடர்புகொள்ளலாம்.

தொடர்புகளுக்கு: **Raj - 416.999.3878**

## வேலைக்கு ஆள் தேவை

**WINDOW ASSEMBLER**

Scarborough பகுதியிலுள்ள **WINDOW** தொழிற்சாலைக்கு சகலவிதமான **PVC VINYL Window**க்களைத் தயாரிப்பதற்கு **முன்அனுபவமுள்ள** வேலையாட்கள் தேவை.

தொடர்புகளுக்கு: **416.875.4119**

## NKV பரிகார ஜோதிடம்

இந்தியாவின் Nostradamus Dr. N.K. வசந்தன் மறைஞான சித்தரின் Astro NKV Acadamyஇல் அடிப்படை, உயர்நிலை ஜோதிடப் பயிற்சி பெற்றவரால் கர்மாவின் தாக்கத்தால் ஏற்படும், ஏற்படப்போகும் துன்பங்களுக்கு NKV முறையிலான பரிகாரம் வழங்கப்படும். கர்மா கரைவதற்கான முறையான பரிகாரம் NKV முறைப்படி வழங்கப்படும். காசிக்கு யார் செல்ல வேண்டும், காசியில் எவ்வாறு பரிகாரம் செய்வது என்று மிகவும் நேர்த்தியான முறையில் அறிவுறுத்தப்படும். கர்மா குறைவதற்கான பிராப்தம் உள்ளோர் என்னுடன் தொடர்பு கொள்வர். கடவுள் நம்பிக்கை உள்ளோர் மட்டும் Whatsapp Message மூலம் தொடர்பு கொள்ளவும்.

வள்ளிமலை ஜோதிடர் - Markbass - **647.303.0425**

## யோக சோதிடம்

கிரகப்பொருத்தம் பார்த்தல் | சுபமுகூர்த்தம் கணித்தல்
சாதகக் குறிப்புக் கணித்தல் | பலன் பார்த்தல்

தொடர்புகளுக்கு: 416.299.8361



## சந்திரமௌலீஸ்வர சிவாலயம்

தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்
ஆலயம் திறந்திருக்கும் நேரம்

வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில்: காலை 7am - மாலை 9pm
திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm மாலை 5pm - 9pm

விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம். ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்

**Tel: 416 . 754 . 7338 / 416 .724 .7480**

3011 Markham Road , Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarborough

# CONDO. FOR RENT

## VICTORIA ST. & BROCK WHITBY

1606-1614 Charles Street - 2 Bedroom & 1 washrooms condo. for rent. 1 parking included. 9 Min. walk from Whitby GO Station. Avail. immediately.



Please Contact: **416.564.9708**

தானாக உயரும்
**வயது!**
விடாமல் துரத்தும்
**காலம்!!**
தடுக்க முடியாத
**நேரம்!!!**
கடக்கத் துடிக்கும்
**இளமை!!!!**
காலைத் தடுக்கும்
**சமூகம்!!!!!**
தொடவேண்டிய
**இலக்கு!!!!!!**
இத்தனை போராட்டம் தான்
**வாழ்க்கை!!!!!!!**

## ANANDHA ILLAM SENIOR INC
## ஆனந்த இல்லம்



LICENCED NURSE ON CALL
24 HOURS A DAY

- Medication Management
- Compassionate staff, on-site 24 hours a day
- Personal assistance including bathing, dressing and grooming
- Exercise /Physical Therapy room /Yoga
- Service/Emergency pendent
- Civitas passion program
- 3 home - cooked meals per day
- Coffee lounge
- Country living at its best

ஆரோக்கியம், ஆனந்தம்,
அமைதியான வாழ்வு.
வயதான காலத்தில் சுகமாக வாழ
யோகப் பயிற்சிகள்.
தரமான சத்து நிறைந்த உணவு.
24 மணிநேர பாதுகாப்புடன்கூடிய
தரமான சேவை.
அனைத்துவிதமான வசதிகளுடன்
அமைந்த ஆனந்த இல்லம்.

**Please Contact :**
**Jeevitha- 416.939.2224**
**Jahn - 647.721.4057**

**SPECIAL OFFER**
**50% Off for Registered customer before December 31, 2024**

## wpm Property Management
Unit #210 – 80 Corporate Dr, Scarborough, ON, M1H 3G5

**Available for Rent**

***Oshawa*** -Hwy 2 / Trulls Rd - Bungalow (5Brm + 2Bath) **[$3475/ month]**

***Whitby*** -Des Newman / Twin Streams -Full ( 3 Brm + 3 Bath + Parking ) **($3500/month)**

**Oshawa - Upper floor Bond/Mcmillan ( 3 Brm + 1 Bath ) Separate entry and laundry ( $2950/month)**

***Scarborough*** **- Morningside/Sheppard ( 2 Brm + 1 Bath ) ($1850/month)**

**Niagara Falls - Lundy's Lane / Dorchester (4BR 3Bath $3200)**

**Available for Rent**

***Oshawa*** - Harmony/ Olive - Basement (1Brm + 1 Bath + 1 parking) **[$1450.00/month including utilities)**

***Scarborough*** - Mccowan & Lawrence-Basement (2Brm + 1Bath) **[$2,100/month)**

***Whitby*** - Country Lane & Southwell Ave Basement (2Brm + 1Bath) **[$1600/month]**

***Mississauga***-Confederation / Burnhamthorpe - Condo (1Brm + 1Bath) **[$23000/month]**

**Scarborough - Morningside/Lawrence main floor(3 Bm + 1 Bath) ($2800)**

**BUY / SELL/ LEASE / INVEST**

- வீடு ஒன்றை வாங்கி வாடகைக்கு விட்டு வருமானம் தேட விரும்புகிறீர்களா?
- வாடகைக்குக் கொடுக்கும்போது சரியானவர்களைத் தேர்ந்தெடுத்துக் கொள்வது என்ற குழப்பம் அல்லது பயம் இருக்கிறதா?
- இப்போது வசித்துவரும் வீட்டில் இருந்தே கடன் பெற்று இன்னுமொரு வீட்டை எப்படித் தெரிவு செய்து வாங்குவது என்று அறிய விரும்புகிறீர்களா?
- வாடகைக்குக் கொடுத்திருக்கும் வீட்டின் வாடகைப் பிரச்சனைகளைக் கையாளத் தகுந்த நிறுவனத்தைத் தேடுகிறீர்களா?

**Real Estate & Property Management** துறையில் 32 வருடங்கள் அனுபவமுள்ளவரைத் தொடர்பு கொள்ளலாம்.

**கரு கந்தையா - 416.616.7278 Watson Property Management - 416.284.9999**

We are managing Condos, Houses, Apartments in the area of
Toronto, Markham, Ajax, Whitby, Oshawa, Clarington, Brampton, Hamilton, Beaverton, Trenton, and Kingston.

**இலங்கையில் (Sri Lanka)**
**வீடு, காணி, வியாபார நிலையங்கள்**
**வாங்க விற்க தொடர்புகளுக்கு**

**Lanka Global Real Estate**
170 Columbuthurai Rd
Jaffna
Email: sales@langaglobal.lk
Phone: 94-77-666-5513

**கரு கந்தையா**
[கனடா]
Phone:
1-416-616-7278

**அரன் கந்தையா**
[அவுஸ்திரேலியா]
Phone:
61-418-553-6613

# வரலாற்றுப் புகழ்மிக்க ஒன்றாறியோ அறிவியல் மையத்தில் நீச்சல் தடாகமா?



T. சிவபாலு

ஒன்றாறியோவில் அமைந்துள்ள அறிவியல் மையத்தை மூடிவிட்டு வேறு வருமானம் தரத்தக்க ஒரு நிலையமாக அந்த இடத்தை ஒன்றாறியோ முதல்வர் டக் போட் (Doug Ford) மாற்றுவதற்கு முயற்சிகளை மேற்கொண்டுள்ளமை ஒன்றாறியோ பாடசாலைகளுக்கு மட்டுமல்ல, இங்குள்ள மக்களுக்கும் பெரும் ஏமாற்றத்தைக் கொடுத்துள்ளது. பல்வேறு மக்கள் போராட்டங்களைத் தொடர்ந்து எடுத்துவருவதை அறியமுடிகின்றது. அறிவியல் மையத்தை வேறு இடத்திற்கு மாற்றிவிட்டு, அது அமைந்திருக்கும் இடத்தில் வேறு ஒன்றை அமைப்பதன் மூலம் தனக்குத் தேவையான ஒப்பந்தகாரருக்குக் கொடுப்பதன்மூலம் ஒரு கல்லில் இரண்டு மாங்காய் அடிக்க முனைகின்றாரா முதல்வர் என்ற சந்தேகக் கண்கொண்டு பார்ப்பதைக் காண முடிகின்றது. அறிவியல் மையத்தை இடிப்பதற்கு ஒப்பந்தம், புதிதாக அமைப்பதற்கு ஒப்பந்தம், அதேஇடத்தில் மீள வேறு ஒன்றை உருவாக்குவதற்கு ஒப்பந்தம் என்பன போன்ற ஒப்பந்தங்களை மேற்கொள்ளுவதன் மூலம் தனித்துவமான வருமானத்தை அதிகரிக்க முயற்சிக்கின்றாரா என்ற கேள்வியும் எழுகின்றது.

இந்த முயற்சிக்கு ஒன்றாறியோவில் உள்ள தொழிற் சங்கங்கள் தமது எதிர்ப்பைத் தெரிவித்து வருகின்றன. குறிப்பாக ஒன்றாறியோ கல்வியியலாளர்களின் தொழிற்சங்கம் கடும் எதிர்ப்பைக்



காட்டியுள்ளது.

மாணவர்கள் நேரடியாகப் பார்த்துக் கற்றுக்கொள்ளும் நிலையமாக உள்ள ஒன்றாறியோ அறிவியல் மையத்தை பல்வேறு வகையான கற்றலுக்கான தளமாக மாணவர்களை அழைத்துச் சென்று காண்பித்து கற்றலுக்கு வளமாக அமைந்த அந்த நிலையத்தை மூடிவிட்டு ஒரு படோபகாரமான குளியலுக்கான நீச்சல் தடாகத்தையும் குளியல் அறைகளையும் கட்டி அதன்மூலம் வருமானத்தைப் பெருக்கிக் காட்ட முயற்சிப்பதான கருத்து கல்வியாளர்களிடையே விசனத்தை ஏற்படுத்தியுள்ளது என்பதுதான் உண்மை. ஒன்றாறியோ அறிவியல் மையத்தில் கூரையின் ஒருபகுதி உடைந்து விழுந்ததைத் தொடர்ந்து மாகாண அரசு அதன் பாதுகாப்புத் தொடர்பாக ஆய்வு ஒன்றை நடத்தியது. அந்த ஆய்வின்மூலம் ஒன்றாறியோ அறிவியல் மையத்தை




புனரமைப்புச் செய்ய $50 மில்லியன் வரையில் செலவு வருமெனத் தெரிய வந்தது. அதைத்தொடர்ந்தே தற்போதைய இடத்திலுள்ள மையத்தை மூடிவிட்டு 'Ontario Place' இல் புதிய அறிவியல் மையத்தை அமைக்க முடிவு செய்துள்ளது.

எதிர்காலச் சந்ததியினருக்கான கருவூலமாக இதுவரை விளங்கிய ஒன்றாறியோ அறிவியல் மையம் மூடப்படுகிறது.

மாணவர்களைப் பொழுதுபோக்காகக் காட்சிப்படுத்தி இதுவரை கற்றலுக்குப் பயன்படுத்தப்பட்ட நிலை இல்லாமல் போவது அவர்களின் கல்வியில் பெரும் பாதிப்பை ஏற்படுத்துகிறது. 'SPA' அமைக்க முற்பட்டிருப்பது உண்மையில் இந்த இடத்தில் தேவைதானா என்ற கேள்வி எழுகின்றது.

இந்த 'SPA' என்பது இலத்தின் மொழியின் சுருக்க வடிவம். அதாவது Sanus Per Aquam என்பதாகும். இது ஆங்கிலத்தில் 'Health Through Water' என்பது நீரினால் உடல்நலத்தைப் பேணுதல் என்பதாகும். இந்நிலையம் ஏழைகளுக்கு எந்த வகையிலும் உதவப்போவதில்லை. மாறாக மேல் மட்டத்தவருக்கான செல்வந்த பொழுது போக்காகவே கருத முடியும். எனவே ஏழை மாணவர்களின் கல்விக்கு உறுதுணையாக அமைந்துள்ள அறிவியல் நிலையத்தை மூடிவிட்டு அதற்குப்பதிலாக நீச்சல் தடாகங்களையும், குளியலறைகளையும் அமைப்பதால் பயன்பெறப் போவது டக் போட்டின் திட்டமா? என்ற கேள்விகளை தொழிற்சங்கங்களும் மக்களும் வினாவி வருவதனைக் காண முடிகின்றது. இத்திட்டத்தைத் தடுத்து நிறுத்த பொதுமக்களுக்கு அறைகூவல் விடுத்துள்ளது கல்வி சார்ந்த

# கனடாவில் சறுக்கும் பனியில் விழுந்து காயமுற்றால்?



சிவ. பஞ்சலிங்கம், B.Com.,
(Licensed Insurance Broker)
காப்புறுதி சம்பந்தமான ஆலோசனைகளுக்கு
416.321.0999

## கனடாவில் சறுக்கும் பனியில் விழுந்தால் என்ன செய்ய ேண்டும்

கனடாவில் வீடுகளுக்கு முன்னால் உள்ள நகரசபைக்குச் சொந்தமான நடைபாதைகளில் கடுமையான குளிர் காலங்களில், கொட்டும் உறை பனியில் எவராவது இடறி விழுந்து உடல் காயமுற்றால், அந்தப் பாதிப்பில் வீட்டு உரிமையாளர் பொறுப்பு ஆகின்றாரா?

இக் கேள்விக்குரிய பதிலை இத்தகைய நட்டஈட்டு கோரல் வழக்குகளில் சமூகமளிக்கும் கனடாவின் பிரபல்யமான சட்டத்தரணி திரு. போப் ஆருண் (Mr.Bob Aaron) அவர்கள் கனடிய உயர் நீதிமன்றத்தில் வழங்கப்பட்ட தீர்ப்பினை அடிப்படையாக வைத்து பின்வரும் தலைப்பில் ஆய்வுக் கட்டுரை ஒன்றினை ஆங்கில ஊடகங்களில் வெளியிட்டிருந்தார்.

'Home owners not liable for side walk mishaps' (நடைபாதைகளின் இடையூறுகளுக்கு வீட்டு உரிமையாளர் பொறுப்பல்ல.)

### Paterson Vs Winsor

என்ற வழக்கின் தீர்ப்பு கடந்த டிசம்பர் 12, 2005இல் வெளிவந்திருந்தது.

இவ்வழக்கில் வீட்டுக்கு முன்னால் உள்ள நடைபாதையில் விழுந்து காயமுற்றவர் வீட்டு உரிமையாளருக்கு எதிராகத் தொடர்ந்த வழக்கில், நட்டஈடு வழங்கும் பொறுப்பு நகரசபைக்கு உரியது எனவும் வீட்டு உரிமையாளருக்கு எதுவிதமான பொறுப்பும் இல்லை எனத் தீர்ப்பு வழங்கப்பட்டது.



இப்படியாகச் சட்டமிருந்தபோதிலும் பின்வரும் இரு சந்தர்ப்பங்களில் உரிமையாளர் பொறுப்பாகின்றார்.

(1) ஏதாவது வர்த்தகம் நடைபெறும் இடமாக இருந்தால் வாடிக்கையாளர்கள் அதனை உபயோகிப்பதால் அங்குள்ள நகரசபைக்குச் சொந்தமான நடைபாதையில் எவருக்காவது பாதிப்புகள் ஏற்பட்டால் அங்கு உரிமையாளர் பொறுப்பாகின்றார்.

(2) வீடுகளிலிருந்து பெருக்கெடுத்து ஓடும் நீர் அந்த இடத்தின் நடைபாதையில் உறையும் நிலையை உருவாக்கி அங்கு ஒருவர் விழுந்து உடல் காயமுற்றாலும் வீட்டு உரிமையாளர் பொறுப்பாகின்றார்.

ஆனால் வீட்டு உரிமையாளருக்குச் சொந்தமான எல்லைக்குள் விழுந்த பனியைத் துப்பரவாக்காது எவராவது விழுந்து காயமுற்றால் அங்கு வீட்டு உரிமையாளர் பொறுப்பாகின்றார். இங்கு ஒன்றினைத் தெளிவாகப் புரிந்து கொள்ளவேண்டும்.

அங்கு உங்களின் வீட்டுக் காப்புறுதிக் கம்பனி தங்களுக்காக சட்டத்தரணிமூலம் நீதிமன்றத்தில் சமூகமளிப்பார். உங்கள் தவறுக்கான நட்டஈட்டினையும் வழங்க வேண்டுமானால் கொடுத்துத் தீர்ப்பர்.

ஆனால் இந்த இடங்களில் வீட்டுக் காப்புறுதிகள் இல்லாதோர் தங்கள் சொந்தப் பணத்திலேயே கொடுத்துத் தீர்க்க வேண்டும்.

ஆனால் பனி கொட்டப்பட்டு முடிவடைந்து சுமார் 12 மணித்தியாலங்களுக்குள் வீடுகளுக்கு முன்னால் உள்ள நகரசபைக்குச் சொந்தமான நடைபாதையில் விழுந்த பனியை அகற்றி துப்பரவு செய்யாவிட்டால் நகரசபைச் சட்டவிதிகளின்படி $125 தண்டனைப் பணம் செலுத்தவேண்டும். ரொறொன்ரோ நகரசபை எல்லைக்குள் இருப்போர் எவரேனும் தங்கள் அயலவர்கள் எவராவது இவ்வாறு துப்பரவு செய்யவில்லையானால் 311 என்ற நகரசபையின் முறைப்பாட்டு இலக்கத்துக்கு அழைத்து பதிவு செய்யுமாறு கோரப்பட்டுள்ளது. இதேபோல் அவரவர் தாங்கள் வாழும் நகரசபைக்கு அழைத்து முறைப்பாடு வழங்கலாம்.

- நகரசபைக்கு எதிராகவோ அல்லது தனி நபருக்கு எதிராகவோ தங்கள் பாதிப்புகளுக்கான நட்டஈடு கோரும், சட்ட நடவடிக்கை எடுக்கும் எவரும் சம்பவம் நடந்து பத்து நாட்களுக்குள் நகரசபை அலுவலகத்துக்கு முதலில் முறைப்பாடு செய்யவேண்டும்.
- இரு வருடங்களுக்குள் நட்டஈடு கோரி நீதிமன்றத்தில் வழக்குத் தாக்குதல் செய்ய வேண்டும்.
- உடல் காயங்களின் பாதிப்பு என்பது அன்றாட வாழ்வின் செயற்பாடுகளை முடக்குகின்றது என்பது மருத்துவ ஆதாரங்களுடன் நிரூபிக்கப்படல் வேண்டும்.
- விழுந்து காயமுற்ற இடத்தில் துப்பரவு செய்யத் தவறியது காரணம் என்பதும் நிரூபிக்கப்படல் வேண்டும்.

ஏனெனில் இப்படியான பாதிப்புகளின் போது எதிர்கொள்ளும் நட்டஈடு கோரும் வழக்குகளில் வெற்றி பெற்றவர்களும் உண்டு. சரியான முறையில் இவைபற்றிப் புரிந்துகொள்ளாது முன்னெடுப்புகளை நகர்த்தி வெற்றிபெற முடியாமல் போனவர்களும் உண்டு.



# Lucky Baskar (லக்கி பாஸ்கர்) திரைவிமர்சனம்



ஆரணி ஞானநாயகன்

2024 தீபாவளியன்று வெளியான இப் படத்தில் துல்கர் சல்மான் (Dulquer Salmaan) கதாநாயகனாக நடித்துள்ளார். தெலுங்கு தயாரிப்பான இப்படம் தமிழ் உட்பட இந்திய மொழிகள் பலவற்றில் வெளியானது.

1980ஆம் ஆண்டுகளில் நடைபெறும் இப்படத்தின் கதை பாஸ்கர் (Dulquer) வங்கி ஒன்றில் காசாளராக வேலை செய்கிறார். வீட்டில் தனது மனைவி, மகன் மற்றும் வருத்தத்தால் பேசமுடியாத தந்தையுடன் வாழ்ந்து வருகிறார். அவரது தந்தை ஒரு கணக்காளர் என்றாலும், வியாபாரத்தில் நட்டமடைந்ததால் அவர் களுக்குப் போதியளவு பண வசதியில்லை. இதனால் பாஸ்கர் தனது குடும்பத்தை வழிநடத்தக் கஷ்டப்படுகிறார்.

இந்நிலையில் அவர் வேலை செய்யும் வங்கியிடம் கடன் கேட்க வருவோருக்கு தனது ஓய்வு நேரத்தில் சிறிதளவு பணத்தை வாங்கிக்கொண்டு, உழைக்க விண்ணப்பப்பத்திரங்களை நிரப்பி வருகிறார். இவ்வாறு கடன் பெற விரும்பும் இறக்குமதி செய்யும் வியாபாரி ஒருவருக்கும் பணம் அவசரமாக, சிறிய காலத்திற்குத் தேவைப்பட்டாலும், பாஸ்கர் அவருக்கு கடன் கிடைக்காது என உணருகிறார்.



வங்கியில் உதவி முகாமையாளர் பதவியைப் பெற உழைக்கும் பாஸ்கர் நேர்மையற்ற முறையில் வியாபாரிக்கு உதவ விரும்பவில்லை. ஆனால், வியாபாரிக்கு உதவினால், வியாபாரத்தில் இருந்து ஒரே நாளில் லாபம் தனக்குப் பெற முடியும்.

பாஸ்கர் வியாபாரிக்கு உதவுவாரா? தனது குடும்பத்தைக் காப்பாற்றுவாரா? என இப்படத்தைப் பார்த்து அறியுங்கள்.

சட்டத்திற்கு மாறாக செயல்படும் கதா நாயகனைக் கொண்டுள்ள படங்களில் அவர் சட்டத்தால் தண்டிக்கப்படுவார், இல்லாவிட்டால் மனம் மாறித் திருந்தி விடுவார். இவ்வாறு அமையும் இப்படத்தில் கதை பழமையானது. ஆனால் வங்கி, வியாபாரம், 1980களின்



தொழில்நுட்பம் போன்றவற்றுடன் இப்படம் விறுவிறுப்பாகச் செல்கிறது. இது உண்மையில் நடக்க முடியுமா? என்ற சந்தேகத்திற்கு நேரம் விடாமல் படம் இயற்கையாகச் செல்கிறது. அத்தோடு இதில்வரும் சில மோசடி முறைகள் உண்மையில் நடந்த சம்பவங்கள்.

குடும்பத்தைக் காக்க ஒரு சட்டவிரோதமான வழியில் பணத்தை உழைத்தால் அப்பணம் அவரின் பேராசையை வளர்த்து அவரை குடும்பத்திலிருந்து பிரிக்கலாம் என்ற கருத்தை இப்படம் எதிர்பார்த்தபடி உணர்த்துகிறது. ஆனால் அதற்கு மேலாக, குடும்பத்தால் வழி தவறவிட்ட வரையும் மீண்டும் மீட்க முடியும் என்றும் இப்படம் நன்றாக உணர்த்துகிறது. இக்கருத்தை எளிதாக விளக்குவது இப்படத்தின் சிறப்பம்சமாகும்.

குடும்பம் இப்படத்தில் முக்கியமாக இடம் பெற்றாலும், பாஸ்கரின் மனைவிக்கு எதிர்பார்த்த காட்சி, வசனம், நடிப்பு என்ற வகையில் முக்கியத்துவம் இல்லை. வேறு பெண் கதாபாத்திரங்களும் முக்கியம் இல்லை. பாஸ்கரின் தந்தைக்கு நல்ல காட்சி ஒன்று அமைந்துள்ளது.

விறுவிறுப்பான நடையும் எளிதான நல்ல கருத்தும்கொண்ட இப்படத்தை அனைவரும் குடும்பத்துடன் பார்க்கலாம்.

## அமெரிக்க...

09ஆம் பக்கத்தொடர்ச்சி

அமைப்புடன் இணைந்து கொண்டன. அமெரிக்கா, ஐரோப்பா, ஐ.நா போன்றவற்றால் பயங்கரவாத அமைப்பாகக் கருதப்படுகின்றது. இவ்வமைப்பும் முன்னர் Free Syrian Army என அழைக்கப்பட்ட Syrian National Armyஉம் (எஸ்.என்.ஏ துருக்கி ஆதரவு அமைப்பாகும்) சிரியாவில் ஐம்பது வருடங்களுக்கு மேலாக ஆட்சி செய்துவரும் ஆசாத் குடும்ப அராஜக ஆட்சியை முடிவுக்கு டிசெம்பர் 08, 2024இல் கொண்டுவந்தன. சிரியாவின் வடகிழக்குப் பகுதியில் குர்தீஸ் அமைப்பான எஸ்.டி.எப்.உம் துருக்கிய ஆதரவு அமைப்புகளும் சண்டையிட்டு வருகின்றன.

ஆசாத் ருசியாவில் தஞ்சம் புகுந்துள்ளார். ருசியாவின் கடற்படைக் கப்பல் ஒன்றும், விமானப் படைத்தளம் ஒன்றும் சிரியாவில் உள்ளன. அத்துடன் சுமார் ஏழாயிரம் இராணுவ வீரர்கள் தங்கியுள்ளனர். இவர்களின் பாதுகாப்பையும், தளங்களின் பாதுகாப்பையும் உறுதிப்படுத்த புதிய ஆட்சியாளர்களுடன் ருசியா உரையாடுகின்றது.

இஸ்ரேல் தனது பங்கிற்கு கோல்டன் ஹைட்ஸ் பிரதேசத்தை விஸ்தரிக்க சிரியாவின் நிலப்பரப்பைக் கைப்பற்றுகின்றது. அதுமட்டுமல்லாமல் சிரியாவின் ஆயுதக் களஞ்சியங்களின்மீதும் தாக்குதல்களை மேற்கொள்கின்றது. அகன்ற இஸ்ரேலின் விரிவாக்கத்தினுள் காசா, மேற்கு கரை, லெபனான், சிரியா என விரிகின்றது.

சிரிய மக்கள் ஆசாத்தின் வெளியேற்றத்தைக் கொண்டாடி வருகின்றனர். சிறைகள் உடைக்கப்பட்டு சிறைக்கைதிகள் விடுவிக்கப்பட்டுள்ளனர். ஆசாத்திடமிருந்து விடுதலை பெற்ற சிரிய மக்கள், மற்றொரு கொடுங்கோல் அமைப்பின் ஆட்சிக்குள் வந்துள்ளனர். இது சிரிய மக்களுக்கு விடுதலையா?

புதிய இஸ்லாமிய அடிப்படைவாத அரசு சிரிய மக்களின் நலனில் அக்கறை கொள்ளுமா? சிரியாவில் உள்ள 10%மான கிறிஸ்தவர்களின் உரிமைகள் பாதுகாக்கப்படுமா? கிறிஸ்தவர்கள் உட்பட்ட 26% மான சிறுபான்மையினரின் எதிர்காலம் சுபீட்சமாக அமையுமா? ஆசாத் ஒரு சிறுபான்மையினத்தவர். முஸ்லீம் அடிப்படைவாத நாடுகளில் சிறுபான்மையினர் பாதுகாப்பாக இல்லை. பெண்கள் மிகவும் மோசமாக ஒடுக்கப்படுகின்றனர். ஊடகங்கள் சுதந்திரமாக இயங்க முடியாது. ஏதிர்க் குரல்கள் அழிக்கப்படும். இந்த நிலை சிரியாவிலும் ஏற்படும்.



குர்தீஸ் மக்கள் போராட்டத்தை ஒடுக்க துருக்கி புதிய ஆட்சியாளர்களுடன் இணைந்து செயல்படும். இஸ்ரேல், ஹிஸ்புல்லா, ஹமாஸ் போன்று சிரியாவையும் ஒரு பலவீனமான சக்தியாக மாற்றும். சிரிய மக்கள் மற்றொரு லிபியாவை எதிர்நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றனர்.



படித்ததில் பிடித்தது

நீங்கள் வாசித்து மகிழ்ந்ததை மற்றவர்களும் வாசிக்கட்டுமே.

அனுப்புங்கள் Vlambaram@sympatico.ca

யாம் பெற்ற இன்பம் மற்றவர்களும் பெறட்டுமே!

## பெரிய முட்டாள்

சிறுவன் ஒருவன் முடிதிருத்தும் கடைக்குள் நுழைந்தான். அப்போது அந்தக் கடைக்காரர் அங்கிருந்த வாடிக்கையாளரிடம், “இந்த உலகத்திலேயே இவன்தான் மிக முட்டாள் பையன். அதை இப்போதே உங்களுக்கு நிரூபிக்கிறேன்” என்று மெதுவாகச் சொல்லிவிட்டு ஒரு கையில் 5 ரூபாய் நாணயத்தையும் மறு கையில் 2 ரூபாய் நாணயத்தையும் தந்தார். அந்தப் பையனை அழைத்து “உனக்கு இதில் எது வேண்டுமோ அதை எடுத்துக்கொள்” என்றார். அந்தப் பையன் 2 ரூபாயைப் பெற்றுக்கொண்டு சென்றான். அந்தக் கடைக்காரர் சொன்னார் “பார்த்தீர்களா, இவன் எவ்வளவு பெரிய முட்டாள் என்று”. அந்தப் பையன் கடைக்கு வரும்போதெல்லாம் கடைக்காரர் கடைக்கு வரும் வாடிக்கையாளர்களிடம் இதே கதையைச் சொல்லி இப்படிக் காசைத் தந்து அவனைக் கிண்டல் செய்வது வழக்கம். ஒரு நாள் கடையில் இருந்த அந்த வாடிக்கையாளர் அந்தப் பையன் ஓர் ஐஸ்கிறீம் கடையில் இருந்து வருவதைக் கண்டார். அவர் அவனிடம் சென்று “தம்பி, ஏன் அவரிமிருந்து 5 ரூபாய்க்குப் பதில் 2 ரூபாயைப் பெற்றுக் கொண்டாய்” எனக் கேட்டார். ஐஸ்கிரீமை குடித்துக் கொண்டே அந்தப் பையன் “என்றைக்கு நான் அவரிடம் 5 ரூபாயை எடுக்கிறேனோ அன்றோடு எனக்கு இந்தப் பணம் கிடைப்பது நின்று விடும்.” என்றான்.

**பாடம்:** நாம் ஒருவரை முட்டாள் என்று எண்ணுகிறோமோ, அப்போது நாமே முட்டாளாகிறோம்.

- கண்ணன்


MATH & PHYSICS TUTORING

By a well-qualified and experienced teacher

For all grades from Grade 4 to 1st year of university

Special classes

.Advanced function

.Calculus & vectors

.Data management

All Classes available in Scarborough & Stouffville



Mr.S.F.Xavier (Teacher)

Contact: 647.340 .9490 / 416.732.2228

# சமூகப்பிராணி ஒதுங்கி வாழ்வதா?



சி. நற்குணலிங்கம்
நெல்லியடி – இலங்கை

மனிதன் என்பவன் சமூகப்பிராணி. சமூகத்துடன் இணைந்து வாழ்பவன்தான் மனிதன். அவன் ஒதுங்கி அல்லது ஒதுக்கப்பட்டு வாழ்கிறான் என்றால் அவனிடத்தில் ஏதோ தவறு இருப்பதாகக் கருதலாம். சிலர் தாங்களாகவே ஒதுங்குவர், சிலரை ஒதுக்குவர், சிலர் குடும்பத்தில், சமுதாயத்தில் ஒதுக்கிவைக்கப்படுவர். சிலர் அவற்றிலிருந்து தாமாக ஒதுங்குகின்றனர். தனக்குப் பிடிக்காத விடயங்களில் அடிக்கடி தன் அறிவைவிட மனதுக்கு முதலிடம் கொடுத்து நடப்பதால் சிலர் தன்னை தானே வெறுத்து ஒதுக்கிவைக்க நேரிடுகிறது. தன்னைத்தானே குறைவாக மதிப்பீடுசெய்துகொள்பவனும் மற்றவர்களிலிருந்து தானாகவே ஒதுங்கி வாழ விரும்புவான். குடும்பத்துக்கு ஒவ்வாத, சமுதாயத்துக்குப் பொருத்தப்பாடற்ற விடயங்களில் ஈடுபடுவோர் குடும்பம், சமுதாயம் என்பவற்றிலிருந்து ஒதுக்கி வைக்கப்படுகின்றனர். அன்பின் அளவீடு அதிகாரமாக மாறும்போது அங்கே வெறுப்பிற்கான இடம் கொடுக்கப்பட்டு ஒதுங்கப்பார்ப்பர். எல்லோரும் உங்களை ஒதுக்கி வைக்கிறார்கள் என்பது தவறு. அவர்களுக்கான விஷயங்கள் உங்களிடம் இல்லை என்பதே சரிஎன்றும் எடுக்கலாம்.

உலகில் மிகச் சிறந்த வைரம் நம்மிடம் தோன்றும் எண்ணங்களே. மனித மனங்களில் ஏதோ எண்ணங்கள், பார்க்கும் மனித முகங்களோ எல்லாம் சிந்தனை வயப்பட்டதாகவே தோன்றுகிறது. மேலும் இறுக்கமான மனிதர்களாகவும், இயந்திர கதியான மனிதர்களாகவுமே தென்படுகின்றனர். எண்ணக்குவியல்களின் கலவைகளாகவே மனிதர்களைக் காணமுடிகிறது. சகமனிதர்களைக்கண்டு மகிழும் உள்ளமோ, இன்ப, துன்பங்களைப் பகிர்ந்துகொள்ளுதலோ இல்லாமல் தனியொரு உலகில் சிந்தனைகளோடே ஒதுங் கிப் பயணிக்கும் உலகமாக மாறிவிட்டது.

நகரவாழ்க்கை, தனிக்குடும்பங்கள், ஊர், உறவுகளைவிட்டுத் தூரமாதல், கல்வி வாழ்வில் ஏற்பட்டுள்ள அதிகரித்த சுமைகள், குடும்ப, சமூக வாழ்வில் ஏற்பட்டுள்ள அதிகரித்த அழுத்தங்கள், அதிகரித்த கவலை, கெட்ட நடத்தைகள், சமூகச்சீர்கேடுகளில் ஈடுபடல், மனக் கலக்கம், மனதை ஓய்வாக வைத்துக் கொள்ள முடியாமை, கயவர்களுடன் நட்பாதல் ஒதுங்கி வாழவைக்கின்றன. சவால்களை எதிர்கொள்ள முடியாததோர் ஒதுங்குகின்றனர். நீங்கள் பேசும் தகாத வார்த்தைகள் உங்களை ஒதுக்குகிறது. எடுத்ததற்கெல்லாம் குற்றம் காண்போர் ஒதுக்கிவைக்கப்படுவர். குற்றம் காண்பது அதிகமானால் அன்பின் ஆயுட்காலம் குறைந்துவிடுகிறது.

குடும்பங்களில் யாரால் மகிழ்ச்சி குறைகிறதோ அவர் மனரீதியாகவேனும் ஒடுக்கி வைக்கப்படுவார். அவ் ஒதுக்கம் தற்காலிகமாக அல்லது நிரந்தரமாகவும் போகலாம். அது உரியவரது நடத்தையைப் பொறுத்துள்ளது. ஒருவரை ஒருவர் குறைகூறுதல், விரும்பியதைப் பெறமுடியாமை, ஒருவரை ஒருவர் நம்பாமை, குறைவான புரிதல், ஒருவர் மீது ஒருவர் அக்கறை காட்டாமை, உல்லாசமாக வெளியே செல்ல விரும்பாமை, ஒருவர் வேலையில் ஒருவர் உதவாமை, புதிய முயற்சிகளுக்கு ஒத்துழைப்பு வழங்காமை, விட்டுக்கொடுக்கும் பண்பு குறைவாக இருத்தல், மனம் புண்படும்படியாகப் பேசுதல், மகிழ்ச்சியான சூழ்நிலைகளை உருவாக்குவது குறைவாக இருத்தல் இவற்றில் யார் முந்திக்கொள்கிறாரோ அவர் ஒதுக்கப்படுவார். உங்கள் குடும்ப மகிழ்ச்சி குறைய நீங்கள் எந்த அளவுக்குக் காரணமாக இருக்கிறீர்கள் என்பதை ஒவ்வொருவரும் தெரிந்திருக்க வேண்டும்.



அன்பாகப் பேசுவது, அக்கறை காட்டுவது, வீட்டை அழகாக வைத்திருத்தல், குறைகூறாமல் இருப்பது, சொன்னதைச் செய்வது, இன்முகத்துடன் இருப்பது, முன்மாதிரியாக நடந்துகொள்ளல், பணிவு, உதவுதல், விட்டுக்கொடுத்து நடத்தல், வருந்தும்போது ஆறுதல் கூறல், சுறுசுறுப்பாக இருத்தல், சிறிய விஷயங்களைக் கூடப் பாராட்டுதல், நேரம் தவறாமை, தற்பெருமை பேசாமை, தெளிவாகப் பேசுதல், நேர்மையாக இருத்தல், மனதைப் புண்படுத்தாமல் இருத்தல் இவற்றில் கவனம் செலுத்துவது ஒதுக்குவதைக் குறைக்கும்.

எவராயினும் குடும்பத்துடன் மட்டுமல்ல சமுதாயத்துடனும் இணங்கி வாழ வேண்டும். அதுதான் வாழ்க்கை. ஒதுங்கி வாழும் வாழ்க்கை வெறுமையான வாழ்க்கை. அன்றாட வாழ்வில் ஒதுங்கி வாழ்தல் பாரியதாக்கத்தையும், நெருக்கீடுகளையும் ஏற்படுத்தும். மன அழுத்தம், பதற்றம் போன்ற உளவியல் பிரச்சினைகளையும் ஏற்படுத்தும். இவர்கள் சமூக, கலாசார நிகழ்வுகளில் கலந்துகொள்ளும் ஈடுபாட்டைக் குறைக்கும். இப்படி வாழ்வோர் பிரதிபலிக்கின்ற பயம், வெறுப்பு, கோபம், விவாதம் புரிதல், தனிமையினை உணர்தல், மற்றவர்களுடனான உறவை துண்டித்து வாழ்தல் திடீர் எரிச்சல், மனப்பிரமை, ஆக்ரோச உணர்வு, அர்த்தமில்லாத பேச்சுக்கள், எதிர்மறையான பேச்சுக்கள் போன்றவை எல்லாவற்றையும் சொந்தம் கொண்டாடுவர். இதன் காரணமாக உடல் வழமைக்கு மாறான எதிர்வினைகளுக்கு ஆளாகின்றது.

நம் வாழ்வில் தவிர்க்க முடியாத ஓர் அங்கமாக இருப்பது உறவுகள். உறவுகள் சூழ இருந்தால்த்தான் மனதில் ஒரு மகிழ்ச்சி இருக்கும். குடும்ப உறவுகளைத் தாண்டி நட்பும் உறவாகவே கருதப்படும். எப்போதும் நம்மைச் சுற்றி ஓர் உறவு வளையம் இருந்துகொண்டே இருக்க வேண்டும். ஆனால் எம் நடத்தையால் நாம் ஒதுங்கி இருக்க நேர்ந்தால் அதுபோல் துன்பம் வேறில்லை. எதிலும் முதன்மையான உறவு குடும்ப உறவு என்றார் ஔவை. அதனால்த்தான் "கோடி கொடுத்தும் குடிப்பிறந்தார் தம்மோடு கூடுதல் கோடிபெறும்" என தனது பாடலில் சொல்லிவைத்தார் ஔவை. உறவுகள் தம்மை ஒதுக்கும் அளவுக்கு நாம் நடந்துகொள்ளக் கூடாது.

நம்மை சுற்றியிருப்போரில் பலர் பச்சோந்திதான். தங்கள் தேவைக்காக நம் காலையும் பிடிப்பர், தேவை முடிந்தபின் ஒதுக்கிவிடுவர் அல்லது ஒதுங்கிக் கொள்வர் பலர். சில சமயங்களில் ஒதுங்கி வாழ்தல் தன் முனைப்பு வளரவும் துணைசெய்துவிடுகிறது. இந்த உலகம் உன்னைத் திரும்பிப் பார்க்க வேண்டும் என்றால் ஒதுங்காதே. ஒதுங்கி இருப்பவன் வாழ்வின் காலத்தை வீணடிப்பவன். "காலமே உனது உயிர். அதை வீணாக்குவது உன்னையே நீ கொலை செய்வதற்குச் சமம்" என்கிறார் ஜேம்ஸ்ஆலின். தன்னை அறிந்து புரிந்து நடப்பவனுக்கு ஒதுங்கி வாழும் தேவை ஏற்படாது. "தன்னைப்பற்றிய சுய உணர்வே இந்த நூற்றாண்டின் மிகப்பெரிய கண்டுபிடிப்பு" என்கிறார் மனோதத்துவ அறிஞர். "நாம் துணிச்சலோடு இருந்தால் எந்தச் சக்தியும் நமக்கு துணையாக வந்துவிடும்" என்பது பெசில்கிஸ் அறிஞர் கூற்று. தோல்விகளை அதிகம் சந்தித்து, வெற்றிகளை அதிகம் காண முடியாததோர் ஒதுங்கிவிடுவர். வெற்றி என்பது புத்திசாலிகளின் சொந்தமல்ல. அது முன்னேறத் துடிக்கும் உழைப்பாளிக்கும், தன்னம்பிக்கைக்குமே சொந்தம்" என்றார் ஹிட்லர். எது நடந்தாலும் உனக்கு என்ன வேண்டும் என்பதில் தெளிவாக இரு. ஒதுங்கி, யாரையும் நம்பி இருக்காதே. யாருக்கும் கைநீட்டி வாழாதே. "உழைக்காமல் உண்ணும் உணவு திருட்டுக்குச் சமம்" பகவத்கீதையில் கண்ணபிரான்.

இப்போதுள்ள நவீன வாழ்க்கை முறையின் கோளாறுகளிலொன்று எப்போதும் எதிர்காலத்தைப்பற்றியே சிந்தித்துக் கொண்டிருப்பது, எதிர்காலத்துக்காகவே உழைப்பது, பொருளீட்டுவது, சேமிப்பது, பாடுபடுவது, எதிர்காலம் நோக்கி சிலர் எதையும் செய்யத் துணிந்து சட்டத்துக்கு மாறான செயற்பாடுகளில் ஈடுபட்டு செயலிழந்து இறுதியில் ஒதுங்கி வாழ்கின்றனர். யார் ஒருவர் நிகழ்காலத்தை சரியாக வடிவமைத்துக் கொள்கிறாரோ அவரது எதிர்காலமும் நிச்சயமாக சரியானதாகவே இருக்கும். "நிகழ்காலம் சிறப்பானதாக இருந்தால் எதிர்காலம் வேறாக இருக்க முடியாது" என்றார் மகாத்மாகாந்தி. வாழ்வதா பிழைப்பதா தினை எண்ணிக்கொண்டு வாழ்க்கையதன் பொருள் தெரியாதிருப்போர்கள் வாழ்வில் குழியில் விழுந்து ஒதுங்கி வாழ்கிறார்கள். தறிகெட்டுப்போய், தவறான மதிப்பீட்டில், குறிக்கோளே இல்லாமல் பணத்தைமட்டும் குறிக்கோளாய்க் கொண்டுள்ளவனும், நேர் மாறாய் ஏமாற்றிச் சுரண்டுவோனும், நேர்த்தியாகப் பிழைக்கத் தெரியாதவனும், போலியான வேடத்தை உண்மை என்று மயங்குவோரும், மனிதத்தில் வாழா தோரும் எப்படி ஒதுங்காமல் வாழ முடியும். நெஞ்சில் உரமும் இன்றி, நேர்மைத் திறமுமின்றி இருந்தால் ஒதுங்கித்தான் ஆகவேண்டும்.



உன்னை நீயே தாழ்த்திக்கொள்ளாதே. ஒவ்வொரு சூழலிலும் தன்னைத் தானே தாழ்த்தியும் பிறரை உயர்த்தியும் பார்க்கும் ஒரு மனோபாவம் நம்முள் வளர்வதை தாழ்வுமனப்பான்மை என்கிறோம். கீழ் நிலையில் உள்ளோர் எதற்கும் பிரயோசனம் இல்லாதோர் என்றே தம்மைப்பற்றி கருதுவர். இவர்கள் தாங்களாகவே சிறைப்பட்டு வாழ்வர். உண்மையிலேயே தாழ்வுமனப்பான்மையானது தன்னம்பிக்கைக் குறைவுக்கும், ஆரோக்கியத்துக்கும் மிகப்பெரிய ஆபத்தாக அமைந்து விடுகிறது. சமுதாயத்துடன் ஒன்றிப்போவதற்கும் இது பெரும் சவாலாகவும் காணப்படுகிறது. 'நம் பலம் நாம் அறிவது' என்பது முதல் தீர்வாக அமையவேண்டும். நம் எண்ணங்களும் நமக்கானதாக மட்டுமே இல்லாமல் பிறரை சார்ந்தும் இருக்கவேண்டும். இருப்பின் ஒதுங்க வேண்டிவராது.


